# சௌமியம்



புன்னகை பூக்கும் புதிய தலைமுறை

சமூக, கலை, இலக்கிய இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







*You name it, TAPROBANE has it!*

*Never before in the history of local journalism has so earnest and calculated an effort been made to cater to the widest possible range of reading tastes.*

*TAPROBANE aims at making you a "full man" by giving you authoritative information on a wide variety of subjects.*

*In today's world, one needs to be a Jack of all trades — not a narrow specialist. Conscious of this pressing need, TAPROBANE'S contents cover, among others, such subjects as religion, culture, education, history, archaeology, science, law, commerce, business, industry, economics, banking, finance, management, psychology, marriage-counselling, health, music, cinema, travel and tourism, computer science, sports, etc. etc.*

*Be well-informed. Read TAPROBANE.*

*Annual Subscription. Rs. 120 (post free).*

*Publishers:*

*THE MEIHANDAN PRESS LTD.*
*161, Sea Street,*
*Colombo 11.*
*Telephone: 29435*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழி

மலையகம் எங்கள் தாயகம்!

மலையகச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இன்று பல் வேறு துறைகளிலும் பணியாற்றி வருகிறார்கள்!

நாட்டின் வளத்தைப் பெருக்கும் தொழிலாளர்களாக மட்டுமல்லாது, நல்லாசிரியர்களாக — வைத்தியர்களாக — வழக்கறிஞர்களாக — பொறியியலாளர்களாக — உயரதிகாரிகளாக — எழுது வினைஞர்களாக — வர்த்தகர்களாக — தொழிலதிபர்களாக — முகவர்களாக — சிப்பந்திகளாக இன்னோரன்ன புலதுறைகளிலும் ஈடுபட்டிருக்கும் இவர்கள், இலக்கியம், அரசியல், அறிவியல் தாகத்தினாலே தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தாகத்தைத் தணிக்கும் நீருற்றை, அறிவுக் கருவூலங்களைத் தேடுகிறார்கள். மலையகத்தை மையமாகக் கொண்ட ஒரு இதழ் வெளிவர வேண்டுமெனக் கனவு கண்டுவருகிறார்கள்!

அக் கனவை நனவாக்கும் இலட்சியத்துடனேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த இதழை மலையகத்திற்குச் சமர்ப்பிக்கிறது.

வாசகர்களுக்கு சிறந்த ஓர் ஏடு!
இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒரு களம்!
இந்த இரு நோக்கங்களின் வெளிப்பாடே
இந்த இதழ்!

முருகனை அழகு வடிவத்திலே நாம் காணுகின்றோம் அந்த அழகுக்கு இன்னொரு பெயர் "சௌமியம்", எனவே இவ்விதழுக்கு சௌமியம் என்று பெயரிட்டிருக்கிறோம்.

சௌமியத்திற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் பின்னிப் பிணைந்த பிணைப்பு உண்டு!

சௌமியம், மலையகம் வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு மாத்திரமன்றி, நாடளாவிய அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கும் தனது பங்களிப்பை நல்கும்!

சௌமியத்தை வளர்ப்பது வாசகர்களின், படைப்பாளர்களின் ஆதரவிலும், ஈடுபாட்டிலுமே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்றவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்க சட்டம் இயற்றப்பட்டது, மலையக மக்களின் வரலாற்றிலே முக்கிய நிகழ்ச்சியாகும்.

இச்சட்டத்தை அமுல் நடத்துவதில் பல சங்கடங்கள் இன்னும் உள்ளன. இச்சங்கடங்களை நிவர்த்தி செய்து ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனைப் பூர்த்தி செய்வதில் நாம் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

கடந்த 40 ஆண்டு காலமாக இலங்கை அரசியலிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டு வந்துள்ளோம். இந்த நிலை மாறினால் ஒழிய நாம் முன்னேற்றம் காணுவது கடினம்.

இலங்கைப் பிரஜைகளானவர்கள் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்வதில் விழிப்பாயிருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் நாம் பாராளுமன்றத்திலும், உள்ளூர் ஆட்சி மன்றங்களிலும் தகுந்த பிரதிநிதித்துவம் பெற முடியும்.

கல்வியில் நாம் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். அது நமது அடிப்படைத் தேவை. ஒதுக்கப்பட்ட நிதியை சரிவரப் பயன்படுத்த வேண்டும். குறைகாணுவதில் நேரத்தைச் செலவழிக்காமல், நிவர்த்தி காண கவனஞ் செலுத்துவோம்.

சர்வதேச வீடமைப்பு ஆண்டில் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள் அவர்களுக்குச் சொந்தமாக வேண்டும் என்பதே எமது குறிக்கோள். நாட்டில் நம்மை நிரந்தரமாக்க இது அத்தியாவசியம்.

மலையக சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

நாம் இதுவரை பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் இ. தொ. கா. எனும் பலமிகுந்த கோட்டையும், நம்மத்தியில் நிலவிய ஒற்றுமையுமே காரணம்.

இ. தொ. கா.வைக் கட்டிக்காத்து நம் அனைவரினதும் ஒற்றுமையை வளர்ப்பது இன்றைய தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை

உறுதி கொண்டவனே!
உழைக்கப் பிறந்தவனே!
வா நண்பனே!
சாதிப்பதற்கும் வயதிற்கும் சம்பந்தம் இல்லை.
கீட்ஸ் தனது இமாலயக் கவிதைகளை இயற்றி முடித்தது
இருபத்து நான்கிற்குள்.

பாரதி தனது சாதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துக்
கொண்டது முப்பத்து ஒன்பதில்.

பகத்சிங் சரித்திரத்திற்கே ரத்ததானம் செய்தது
இருபத்து மூன்றில்.

மகாகவி ஷைபரவன் மரித்துப் போனது முப்பது வருஷத்திற்குள்.
மாணிக்கவாசகர் மண்ணில் வாழ்ந்தது இருபத்து நான்கு
ஆண்டுகளே என்று வெண்பா ஒன்று சாட்சி சொல்கிறது.

ஏசு பெருமான் சிலுவை சுமந்து முள்மகுடம் தரித்தது
முப்பத்து மூன்றில்.

அலெக்சாண்டர் வெல்வதற்கு இனிமேல் தேசமில்லையே
என்று திகைத்தபோது வயது முப்பத்திரண்டு.

(அப்படி வருந்தியவன் வெற்றி கொண்டதே உலகப்பரப்பில்
அறுபத்து நான்கில் ஒருபகுதி தான் என்கிறார்கள் ஆராய்ச்சியர்கள்.)

புரட்சி எண்ணங்கள் புறப்பட்டபோது மாஜினிக்கு வயது பதது.

பாட்டுலகத்தைக் கட்டியாண்ட பட்டுக்கோட்டை இத்தனை
அதிர்வுகளை ஏற்படுத்தியது இருபத்து ஒன்பதிற்குள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இளைஞனே!



சாதிப்பதற்கும் வயதிற்கும் சம்பந்தமில்லை

அனுபவமில்லாதவன் எதையும்சாதிக்க முடியாது என்று பொய் சொன்னவன் மீது வழக்குத் தொடுக்க நான் வக்கீலைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

சாதனைகள் எல்லாம் பெரும்பாலும் கற்பனைகளிலிருந்து பிறந்தவைகளே தவிர அனுபவங்களிலிருந்து பிறந்தவைகள் அல்ல.

சாதித்த பிறகு தான் ஒன்று அனுபவமாகின்றது.
அனுபவத்திற்கு வயது தேவை; கற்பனைக்கு ஏது? வயது

★ ★ ★

இளைஞனே!

அனுபவங்களுக்காகக் காத்துக்கொண்டிராதே. மனித குலம் தனது நேற்றைய அனுபவங்களைக்கூட உனக்குத்தான் உயில் எழுதி வைத்திருக்கிறது.

அந்த அனுபவங்களைக் கற்பனைகளாய் நிறம் மாற்று.

கற்பனைகளுக்கு உனது செயல்களால் வடிவம் கொடு.

ஓடிக்கொண்டே இருப்பதுதான் நதி!

உலவிக்கொண்டே இருப்பதுதான் காற்று.

செயல்பட்டுக் கொண்டே இருப்பவன் தான் இளைஞன்.

கவிஞர் வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 29ஆவது மகாநாட்டைப்பற்றி

— பொதுச் செயலாளர்

காங்கிரஸ் தோன்றிய பொழுது எனக்கு வயது பத்து. அதில் சேர்ந்த பொழுது காங்கிரசுக்கு பத்தாண்டு பூர்த்தியாகியிருந்தது. காங்கிரசில் பல மட்டங்களிலே சேவையாற்றியதுமன்றி, பல போராட்டக் களங்களிலே பங்குபற்றி தொழிலாளர் சமுதாயத்திற்காகப் பணியாற்றியது குறித்து நான் பெருமை அடைகிறேன். இந்த வாய்ப்பு எனக்கு கிடைத்தது பெரும் பாக்கியம் என்றே கூற வேண்டும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இ. தொ. காவின் பொதுச் செயலாளராக கடமைபுரிகின்றேன்.

காங்கிரசை வளமிக்க கோட்டையாகப் பரிமணிக்கச் செய்த பெருமை தொழிலாளர் சமுதாயத்தையே சாரும். இக்கோட்டையைக் கட்டியெழுப்ப உயிர்த் தியாகம் செய்தவர்கள் எத்தனையோ பேர். தொழிற்சங்க உரிமைக்காகப் போராடி சிறையில் வாடியவர்கள் எத்தனையோ பேர். தொழிலாளர்களின் ரத்தத்தினாலும் தியாகத்தினாலும் கட்டியெழுப்பப்பட்டதே இந்தக்காங்கிரஸ். இன்று இலங்கையின் மிகப் பெரிய தொழிற்சங்கமாக மாத்திரமன்றி, ஆசியாக் கண்டத்திலேயே பெரும் சக்திபடைத்த தொழிற்சங்கமாகவும் இ. தொ. கா திகழ்கின்றது. சர்வதேச அரங்கிலே அதற்கு மகத்தான அந்தஸ்து உண்டு.

இப்பெருமைகளையெல்லாம் எமக்குப் பெற்றுக் கொடுத்தவர் மலையகத்தின் மாபெரும் தலைவரான திரு. தொண்டமான் ஆவார். அவரது அஞ்சா தலைமைத்துவம் எந்த இடர்பாட்டையும் எதிர்த்து நின்று தன் வயமாக்கிக் கொள்ளும் அறிவுதிறனும் எங்களை வழிப்படுத்தி இன்று இ. தொ கா.வின் சக்திக்கு மெருகூட்டியுள்ளது.

இந்த 29 ஆவது மகாநாடு ஒரு திருப்புமுனையாகும். இதுகாலப் வரை எண்ணற்ற இன்னல்களுக்குட்பட்டு வாடிய எம்மக்களுக்கு ஒரு புதிய சகாப்தம் உருவாகியுள்ளது. நாமும் இந்நாட்டு மக்களின் ஒரு பிரிவினர் என்பதை அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது. இந்த அருமையான சந்தர்ப்பத்தில் ஒன்று கூடியிருக்கின்றோம். புதிய சிந்தனையில் செயல்பட திடசங்கற்பம் பூணும் நிலையிலேயே இருக்கும் நாம் இதுவரை பெற்ற வெற்றிகளை எமக்குரியவையாக்கி, ரத்தம் சிந்தி பல தியாகத் தழும்புகளைத் தாங்கிப் புகழ்பெற்று நிற்கும் எமது காங்ரேசை அணிதிரண்டு மென்மேலும் சக்தியுள்ளதாக எழுப்ப கங்கணம் செய்துகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் சிறக்க

சௌமியம் பொலிவுற

வாழ்த்துகிறோம்

# ஜே. எஸ். சகாப்தீன்

டின்ஸ் மில்க் பார்

84, தளதா வீதி,
கண்டி.

தொலைபேசி: 24159

இ. தொ. கா. மகாநாடு சிறப்புடன்

வெற்றியடைய

சௌமியம் என்றும் நிலைத்து நிற்க

எங்கள் வாழ்த்துகள்

# ஹார்ட்வெயார் மெர்சன்ட்ஸ் &

# எஸ்டேட் சப்ளையர்ஸ்

எஸ்-லோன் தனி வியாபாரிகள்

29, சர். பொன்ட் சொய்சா வீதி,

கண்டி,

தொலைபேசி: 08 22028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌமியத்தின் வளர்ச்சி
இ. தொ. கா.வின் மகிழ்ச்சி
அது சிறப்புற எங்கள் வாழ்த்துகள்

மகாதுவர ஏஜன்சீஸ்

இரும்பு பொருட்கள், மின்சார
பொருட்கள், வியாபாரிகள்
& பெருந்தோட்ட
வழங்குநர்கள்

7, குமார வீதி,
கண்டி.

(கிரீன் கபேக்கு எதிராக)
தொலைபேசி: 2 2 3 29
இ. தொ. கா. மகாநாடு
சிறப்புப் பெற
எங்கள் வாழ்த்துகள்

டயர் டிரேம்

84 யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

தொலைபேசி: 5 4 6 8 5 0

மலையக இதழ் "சௌமியம்"
வெற்றிபெற வாழ்த்துகிறோம்

கண்டி மெடிக்கல்ஸ்

கெமிஸ்ட்ஸ் & டிறக்கிஸ்ட்ஸ்

96. டி. எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.

இ. தொ. காங்கிரசின்
சௌமியம் பொலிவுபெற்று
சிறப்படைய எங்கள்
வாழ்த்துகள்

பார்மஸி ரெக்ஸ்

23 தளதா வீதி.
கண்டி

தொலைபேசி: 2 3 2 7 7

சௌமியம் இதழும் இ. தொ. கா. மகாநாடும்
சிறப்படைய எங்கள் வாழ்த்துகள்

எலிகன்ட் டெக்ஸ்டைல்ஸ்

(ELEGANTS TEXTILES) புடவை வியாபாரிகள்
பெண்கள், ஆடவர் உடுப்புத் தையல் நிபுணர்கள்
182, சென்ட்ரல் மார்க்கட், கண்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.தொ கா.வின் 29 வது மகாநாட்டுக்கு வருக வருக வென இருகரம் கூப்பி வரவேற்பதில் மனமிக மகிழ்கிறேன்.

மலையகத்தின் தலைநகரம் வரவாற்றுப் புகழ்மிக்க கண்டி மாநகரில் இ. தொ. கா. வின் 29வது பேராளர் மகாநாட்டை வரவேற்புக் குழுத் தலைவர் என்ற முறையில் மகா நாட்டைத் தொடக்கி வைக்க எனக்குக் கிடைத்த இவ்வாய்ப்பினை எனது 40 ஆண்டுகால பொது வாழ்வில் எனக்கு இறைவனால் அருளப்பட்ட பெரும் பாக்கியமாகவே நான் கருதுகிறேன்.

மலையக மக்களும், மாற்றாரும் கண்டு வியக்கும் வண்ணம் சமூக அரசியல் தொழிற் சங்கத் துறைகளில் எங்கள் அருமைத் தலைவர் ஆற்றிய சாதனைகளும், ஈட்டிய வெற்றிகளும் அளப்பரியவை.

'' தானுண்ட நீரைத் தலையாலே தரும் தெங்கு '' போல தொழிலாளர் வடித்த வியர்வை, வார்த்த ரத்தம். ஆகிய இரண்டிற்கும் தேயிலையானது செந்நிற தேநீரைப் பதிலுக்குத் தருவதைப் போல, அந்நியச் செலாவணியைத் தனது உழைப்பால் அள்ளித் தரும் பாட்டாளி வர்க்கத்திற்கு, அவனது உழைப்புக்குப் பிரதியுபகாரமாக அவனது குடியிருப்பையும், அதனைச் சுற்றியுள்ள சிறிய காணித் துண்டையும் அவனுக்கே சொந்தமாக்க வேண்டுமென்பதே அக் கோரிக்கையாகும்.

இன்று நடைபெறும் இந்த 29வது பேராளர் மகாநாடு ''நாட்டுரிமை பெற்றவர்களால் நடத்தப்படும் மகாநாடு'' என்று பெருமையடைகிறது. இதுவே நமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி வரலாற்றுச் சாதனை.

வாழ்க உதய சூரியன்!
வளர்க இ. தொ. கா.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பதுகளில் கண்டி

— சித்தார்த்தன் —

முப்பதுகளில் மலைநாட்டிற்கு கண்டி தலைநகராக இருப்பினும், இலங்கையின் தலைநகராகவே பலராலும் கருதப்பட்டது. இன்றுபோல் தாய்நாடு செல்வதற்கு கொழும்புடன் தொடர்புகொள்ள வேண்டி இருக்கவில்லை. வழிப்பயணத்திற்கு வானவூர்தியை நாடவேண்டி இருக்கவில்லை. பத்து பன்னிரண்டு ரூபாய்களில் எவ்வித ஆவணங்களுமின்றி நினைத்தவுடன் புகைவண்டியில் ஏறி அக்கரை செல்லும் வாய்ப்பிருந்ததால், கண்டியே தலைநகர்போல் தோன்றியது. தமிழ் நாட்டினர் கூட கதிர்காமம் கண்டியில் இருப்பதாக எண்ணிக் ''கண்டிக் கதிர்காம வேலோனே'' எனப் பாடும் நிலையில் இருந்தனர். நாற்பதுகளில் கூட தமிழ்நாட்டில் மிகப்பெரிய நூல் வெளியீட்டாளர் சித்தார்த்தனிடம் ''ஏன் சார் சிலோனுக்கும் கண்டிக்கும் எவ்வளவு தூரம்?'' என்று துப்பறியும் கதை ஒன்றில் சென்னை தி. ராஜகோபால் முதலியார் தமது கதாநாயகனிடம் கேட்டதுண்டு. சிலோன் என்றது கொழும்பையே. மலேயா கூட சிங்கப்பூராகவே திகழ்ந்தது, பர்மாவை அதன் தலைநகரான ரங்கூனாகக் கருதப்பட்டதற்குக் காரணம், தமிழ்நாட்டினர் இலங்கையில் பெரும்பான்மையாகக் குடியேறியது மலைநாட்டில் என்பதே காரணம்.

இலங்கையின் தோட்டங்களை நடத்திய தோட்டத்துரைமார் சங்கம் (Ceylon Planters Association), தோட்ட அலுவலர்கள் ஒன்றியம் (Ceylon Estate Staff Union), இலங்கை தோட்ட சகாயநிறுவனம் (Ceylon Planters Society) அனைத்தும் கண்டியிலேயே இயங்கின. அக்காலத்தே இலங்கையையும், இந்தியாவையும் ஆட்சி செய்தது பிரிட்டிஷ் அரசாங்கமே. ஆதலால் இருநாட்டிற்கும் தூதரகங்கள் இருக்கவில்லை. பயணச் சீட்டுகள், விசா போன்ற சொற்களையே பெரும்பாலோர் அறியவேண்டி இருக்கவில்லை. எனினும் இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்களின் நலனுக்காக Agent of the Government of India in Ceylon இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியின் அலுவலகம் இந்தியா விடுதலையடையும் காலம்வரை இயங்கியது கண்டியிலேயே. அம்பிட்டி செல்லும் வழியில் உ. பிற்காலத்தே திருமதி பண்டார நாயக்க அரசாங்கத்தில் தோட்டங்களைத் துண்டாக்கிய கொப்பேகடுவவிற்கு உரிமையான இல்லத்தில் (தற்பொழுது அவரின் மருமகனும், சுதந்திர இலங்கையின் முதல் ஜனாதிபதியுமான வில்லியம் கோபல்லாவவின் மகனும், முன்னாள் லக்கல நாடாளுமன்ற உறுப்பினருமான மொன்டி கோபல்லாவவின் இல்லமாகும்) திகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர இந்தியாவில் ருஷ்ய, சீனத் தூதராகவும், தலைசிறந்த எழுத்தாளரும், ராஜதந்திரியுமான திரு. கே. பீ. எஸ். மேனன் இச்செயலகத்தில் பல ஆண்டுகள் பணி புரிந்தார். அக்காலத்தில் நினைவுகளை அவர் தமது (சுங்கிங் தினக் குறிப்பு) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ரோமன் கத்தோலிக்க மத குருமார் பயிற்சிக்கல்லூரி இவ்வலுவலகத்தில் சிறிது தொலைவிலேயே திகழ்ந்தது. கீழை நாட்டில் தலைமைப் பயிற்சிக் கல்லூரியாகத் திகழ்ந்தது. பர்மா, வியத்நாம் (அக்காலத்தில் இந்தோ சீனம்), பிலிப்பைன்ஸ், சீனா, இந்தியா உள்பட எனப்பல நாட்டவர் இங்கு பட்டம் பெற்றனர். இச்செமினரி (Seminary) என்ற மதகுருமார் கல்லூரி குறித்தும் திரு. மேனன் தமது நினைவுக் குறிப்பில் தமது பசுமையான எண்ணங்களைப் பொறித்துள்ளார். இன்று இலங்கை இந்திய பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ளும் - ஜி. பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன், ஆற்றிய இந்திய வெளி நாட்டுச் செயலர் பணிபுரியும் கே. பி. எஸ். மேனன் அவரது மகனே. அக்காலத்தே அவர் சிறுவனாச் தமது பல உடன்பிறப்புகளுடன் கண்டி தெப்பக்குளத்தைச் சுற்றி நடைபோடுவதை அக்காலத்தவர்கள் கண்டிருக்கின்றனர். கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனால் மதுரை மாரியம்மன் தெப்பக்குளச் சாயலில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும், ஏரியினை இன்று டி. எஸ். சேனநாயக்க தெரு என வழங்கும் திருகோணமலை வீதியில் வசித்த இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த தன வணிகர்களும், அவர்களைச் சார்ந்த கணக்கப்பிள்ளை பொடியன் ஆகியோரும் ''ஆத்து ராமன்'' எனக் கூறுவார்கள். உடற்பயிற்சிக்கு வகையற்ற அவர்களில் மிகச்சிலரே ஏறத்தாழ மூன்று மைல் சுற்றளவுள்ள குளத்தினைச் சுற்றி வரும் ''ஆத்துரவுன்'' போடுவார்கள்.

இன்றைய குயின்ஸ் ஹோட்டல் தொடங்கி Scots Church பள்ளி அருகுவரை தனவணிகர்கள் (செட்டியார்கள்) தொழில் புரிந்தனர். அரு. லெ. சே. நா. முரு. பழனிமுத்து, ஏ. சி, ஏ. என அவர்களது விலாசங்கள் சுவரில் வண்ணங்களால் காட்சியளிக்கும். கணக்கப்பிள்ளை பாஷையில் ''மார்க்கர்'' (Mark) என விளங்கும். மார்க்காவின் கௌரவத்தைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்கள். இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த தன வணிகர்கள் வட்டித்தொழில் புரிந்தனர். சுற்றுப்புற இலங்கையர்களின் பொருளாதாரத்தின் உயர்வு, தாழ்வுக்குப் பொறுப்பாயிருந்தனர். இந்தியாவின் இம்பீரியல் வங்கி கொழும்பிலும், மார்க்கன்டைல் வங்கி நெஷனல் வங்கி ஆகிய இந்திய வங்கிகளின் கிளைகளும் கண்டியில் இயங்கின. பின்னர் தோன்றிய திருவாங்கூர் கொச்சின் வங்கி உள்ளூர் அரசியல் காரணமாகத் திவாலாகிப் பலர் பணமிழந்தது ஒரு துயரக்கதை.

இத்தகைய பொருளாதாரத் தொடர்புகளினால் அக்காலத்தே மும்முரமாக இருந்த பாரதத்தின் விடுதலை இயக்கம் தமிழ்மொழி ஆர்வம், சமயப்பற்று ஆகியவற்றின் தாக்கம் சுற்றுப்புற பண்ணாமம் (மாத்தளை), தொப்பித்தோட்டம் (ஹட்டன்), நீலகிரி (நானுஓயா) எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈல பகுதிகளில் பரவுவதற்கு வாய்ப் பளித்தது.

தரணி புகழ் தாமிரவர்ணி ஓடும் நெல்லை மாவட்டம் மேலைநாட்டுக் கிறிஸ்தவத் தூதர்கள் போதகர்களி ஞல் விரிவடைந்த ஆங்கிலக் கல்வி யில் பயன் கண்டவர்கள் கண்டிக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் பீடத்தை அணிசெய்தனர். மேலே நாட்டவரின் பண்பாட்டினை ஒட்டி உணர்ந்த மணப்பாடு போன்ற ஊர் களிலிருந்து வந்த பரதகுலத்தவர் கள் தோட்டத்துத் துரைமார்களின் உணவு, நுகர்பொருள் தேவைகளைத் தமது ஷாப்புக் கடைகள் என்று வழங்கப்பட்ட (Grocery & Liquor) மதுக்கடைகள் மூலம் பூர்த்தி செய்த னர். தமிழ் வளர்த்த தஞ்சை மாவட் டத்தைச் சேர்ந்த ஐயன்பேட்டைக் காரர்கள் இரும்புக் கடைகளையும், இராமநாதபுரம் மாவட்டம் கீழக் கரை, திருநெல்வேலி மாவட்டத் தில் காயல் பட்டினம், ஏர்வாடி, சாத்தான்குளம் ஊர்களைச் சார்ந்த வர்கள் பலசரக்கு, கொக்கோ, மிளகு கொள்முதல் செய்யும் கடைகளையும் நடத்தினர். இவர்களில் பெரும்பா லோர் முஸ்லீம் அன்பர்களாவர். சந்திமுனைகளில் யாழ்ப்பாண நாட் டவர்கள் சுருட்டுக்கடை நடத்தி வந்தனர். பெரும்பாலும் இவர்கள் அக்காலத்தில் ''வீரகேசரி'' நாளிதழ், சுன்னுகத்திலிருந்து வெளி வந்த ''ஈழகேசரி'' கிழமை இதழுக் கும் விற்பனையாளர்களாகி இருந்த னர். இவ்வகையாகத் தோன்றி ஒரு கலப்புப்பாதிப்பு மலைநாட்டவர் உள்ள வளர்ச்சிக்கு உறுதுணை செய் தன.

---


## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ மகாநாடு வெற்றியடைய எமது வாழ்த்துகள்

நம்பிக்கை நாணயத்துடன் அசல் 22 கெரட் தங்கத்திஞல் செய்து S. M. J. 22 உத்தரவாத முத்திரையிடப்பட்ட நகை களைப் பெற்றுக்கொள்ள இன்றே ஒரு முறை விஜயம் செய்ய வேண்டிய இடம்:

# ஸ்ரீ மைதிலி ஜுவலர்ஸ்

153, செட்டியார் தெரு, கொழும்பு - 11,

இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திஞல் அங்கிகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.

தொலைபேசி: 54940




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் சாந்தம், சமாதானம
அமைதி நிலவவும்

இ. தொ. கா. வின்
29 வது மகாநாடு சிறப்புறவும்

ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரை
(அட்டன்)

மனமுவந்து வேண்டிக்
கொள்கிறோம்.

அருணா ஜுவல்லறி
மெயின் வீதி
ஹட்டன்.

தொலைபேசி : 0512 - 313

மகாநாடு சிறப்புற
சௌமியம் இதழ் பரப்ப
எங்கள் வாழ்த்துகள்!

அரவிய
என்டர்பிரைசஸ்

மின்சாரப் பொருள்
விற்பனையாளர்

63, பட்டி நுவர வீதி.
கண்டி

சௌமியம் மலையகத்தின்
தலைசிறந்த இதழாக மிளிர
அன்புடன் வாழ்த்துகிறோம்!

சைவ உணவு வகைகளுக்கு
எம்மிடம் வருக.

ஸ்ரீ கணேசானந்த
பிராமின்ஸ் ஹோட்டல்

42, பேராதனை ரோட்,
கண்டி.

தொலைபேசி : 23489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தொ. கா. வின் சௌமியம
சிறந்து பொலிய
எங்கள் வாழ்த்துகள்.

**கிங்ஸ் டிரேடர்ஸ்**
இரும்பு வியாபாரிகளும்,
பெருந்தோட்ட வழங்குநர்களும்
58, இராச வீதி
கண்டி.
தொலைபேசி: 08 — 25668

இ. தொ. கா. மகாநாடு
சிறப்படையவும்,
சௌமியம், வளம்பெறவும்
வாழ்த்துகிறோம்.

**மகேஸ்வரி ஸ்டோர்ஸ்**
34, காசில் ஹில் வீதி.
கண்டி.
தொலைபேசி: 22133

இ. தொ. கா. மகாநாடு
சீரும், சிறப்பும் பெற
எங்கள் நல் வாழ்த்துகள்

**ஜயந்திஸ்**
106, கொழும்பு வீதி,
கண்டி
தொலைபேசி; 08— 22464

சௌமியம் மலையகத்தின்
மகத்தான அறிவிதழாக
திகழ வேண்டுமென
வாழ்த்துகிறோம்.

**கயா டிரேடர்ஸ்**
585, பேராதனை வீதி
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைப்பூடுபற்றி சில தகவல்கள்

துவர்ப்பானது, காரமானது— ஆனல் அற்புதமான சக்திவாய்ந்தது. 4500 ஆண்டுகளுக்கு முன் பபிலோனிஸ மன்னன் ஒருவன் வெள்ளைப்பூண்டில் பெரும் நம்பிக்கை வைத்திருந்ததாகவும், 4 லட்சம் புசல் தமது சமையலறைக்குச் சேகரித்ததாகவும் வரலாற்றுக் குறிப்பு உண்டு. எகிப்து நாட்டு மக்களின் அக்காலக் கல்லறைகளில் வெள்ளைப் பூண்டைப் போன்று மண்ணல் செய்யப்பட்ட உருவங்கள் வைக்கப்பட்டு இருந்தனவாம். எகிப்து மன்னர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள பிரமிட்டுகளில் உடலுடன் வெள்ளைப்



பூண்டை வைத்துள்ளனர், இந்திய நாகரீகத்திலும் வெள்ளைப்பூடு ஒரு முக்கிய இடத்தைப் பெற்று வந்துள்ளது. அக்காலத்தில் சிலர் பூண்டை தெய்வமாகவும் மதித்து வணங்கினர். சிலர் தங்களது கழுத்தில மாலையாகவும் அணிந்தனர்.

வேறு எந்தத் தாவரத்தையும் விட பூடு மனிதனுக்கு சர்வரோக நிவாரணி. ரஷ்யாவில் ஒரு பகுதியில் மக்கள் 140 வருடங்கள்வரை உயிர் வாழ்கின்றனர். இவர்கள் வெள்ளைப் பூண்டைத் தொடர்ந்து சாப்பிட்டு வருவதினல், நீண்டகாலம் உயிர் வாழ்வதாகக் கருதப்படுகின்றது.

தமிழர்கள் வெள்ளைப்பூண்டை நீண்டகாலமாகத் தெரிந்து வைத்துள்ளனர், சாப்பாட்டில் வெள்ளைப் பூடு ரசம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

பூண்டு செய்யும் நன்மை தாயும் செய்யமாட்டாள் என்று தெலுங்கில் ஒரு பழமொழிகூட வழங்கப்படுகிறது.

வெள்ளைப்பூண்டின் உபயோகம் உலகெங்கும் வெகு வேகமாகப் பரவி வருகின்றது. கடந்த பத்து வருடங்களில் அமெரிக்காவில் மாத்திரம் இதன் பாவனை நூறு மடங்கு அதிகரித்துள்ளது. கலிபோர்னியாவில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டு, அங்கிருந்து பூண்டை காயவைத்தும். பவு ராக்கியும், ...யோகிக்கின்

★

உடல் நலத்திற்கும், உறுதிக்கும் சத்துள்ள உணவுகள் அவசியமென்பது தெரிந்த விடயம். சத்துள்ள உணவுகள் எவை என்பது தெளிவாகத் தெரியாத விடயம்.

சாதாரணமாக நாம் அன்ருடம் பாவிக்கும் உணவுப்பொருட்கள் பலவற்றில் நல்ல ஊட்டச் சத்துக்களும், நோய் தீர்க்கும் குணங்களும் உள்ளன. அதுபற்றி பலருக்குச் சரிவரத் தெரியாது. உதாரணமாக நமது உணவுகளில் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் பருப்பு வகைகளைக் குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடலாம். பருப்பு வகைகள் என்கின்றபொழுது பயறு, உழுந்து, சோயா போன்ற வர்க்கங்கள் அடங்குகின்றன.

பருப்பு வகைகளைத் தமது உணவின் ஒருபகுதியாக உண்பவர்களில் தமிழர்கள் முன்னோடிகள்.

துங்கக் கரிமுகத்துத் தூமணியான விநாயகருக்கு பாலும், தெளிதேனும், பாகும் பருப்பும் படைக்கப்பட்டு வந்துள்ளது. இட்லி, வடை, தோசை, பருப்பு, உருண்டை போன்றவைகள் எமக்கு நிலைபெற்றுவிட்ட உணவுகளாகும். போஷாக்குபற்றி ஆராய்ந்தவர்கள் பருப்பு வகைகளில் மனிதனுக்குத் தேவையான புரதச்சத்துக்களும், உயிர்ச்சத்துக்களும் மிகையாகக் காணப்படுகின்றன என்பதைத் தெளிவுபடுத்தி உள்ளனர்.

முட்டை, மீன், இறைச்சி வகைகளில் இருந்து பெறக்கூடிய சகலவிதமான சத்துக்களையும் நாம் பருப்பு வகைகளில் இருந்து பெறலாம். நாம் சாப்பிடும் சோறு முழுமையான ஊட்டச்சத்துக்கள் அடங்கிய யதார்த்தமல்ல. இதில் "லைசிஜே" என்ற சத்தானது இதனை நிவர்த்தி செய்வதற்குப் பருப்பு வகைகளை உணவுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.


'சௌமியம் இலங்கையில்
ஒளி பரப்ப எங்கள்
அன்புகலந்த வாழ்த்துகள் !

★

இன்டர் நேசனல்
ஹாட்வெயார்ஸ்

இரும்புப் பொருட்கள்,
மின்சாரப் பொருட்கள்
மருந்துவகை வியாபாரிகள்

80, டி. எஸ். சேனநாயக்க வீதி.
கண்டி.

தொலைபேசி: 08-22220

" சௌமியம் "
மென்மேலும் வளர எங்கள்
மனப்பூர்வமான
வாழ்த்துகள் !

★

வசந்தா ஜுவல்லர்ஸ்

நகை ஈடுபிடிப்பவர்கள்

56, டி. எஸ், சேனநாயக்கா வீதி,
கண்டி.

தொலைபேசி: 08-23015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தொ. கா. வின் மதிப்புமிக்க
செளமியம் இதழ்
நாடெங்கும் அறிவொளி பரப்ப
எங்கள் அன்புகலந்த
வாழ்த்துகள்

# ஜெயலக்ஷ்மி
# ஸ்டோர்ஸ்

*ரிக்கன் டயர் ஏக ஏஜண்டுகள்*

**91 A**, மெலிபன் வீதி,
கொழும்பு - **11.**
தொலைபேசி : **26149 - 541329**

***153***, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - **2.**
தொலைபேசி : **548547 , 547741**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய உயிர்

வெட்டி இழுத்த தேயிலை வாது கையில் இருக்கவே இழே பார்த்தான் மூக்கையா.

வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. தலையை நிமிர்த்தி சூரியனைப் பார்த்தான். ஒரு விநாடி வானவில்லாய் வர்ணம் காட்டிய சூரியக் கதிர்களிடமிருந்து பார்வையை ஒதுக்கிக்கொண்டான்.

மணி பதினொன்றுக்கு கொஞ்சம் கூடக்குறைய இருக்கலாம்.

ஏறு வெய்யில்! வெட்டுவது கவ்வாத்து! வியர்த்துக் கொட்டியது.

கறுத்ததேகத்தின் வியர்வைப் பிசுக்கில் பட்டுத் தெறிப்பது போலவே வலது கை பிடித்திருந்த கத்தியின் கூர்மையிலும் பட்டுத் தெறிக்கிறது சூரியக்கதிர். இரண்டுமே இரும்புதான்.

முட்டையுடன் ஏறும் சிற்றெறும்புக் கூட்டம் போல் தண்ணீர்ப் பையுடன் ஏறிக் கொண்டிருந்தனர் சிறுவர்கள்.

மூக்கையாவின் மூத்தவன் சிங்காரமும் அவர்களுடன் ஏறிக் கொண்டிருப்பான். போத்தலில் தேத்தண்ணீருடன்.

தேனீர் தேவையில்லை. வெறும் பச்சைத் தண்ணீர் கிடைத்தாலே போதும். அந்த நேரத்துக்கு சுவர்க்கம் போலிருக்கும்.

மலைமேல் நிற்பதால் சூரியனுக்கு அருகில் வந்து விட்டதைப் போல் சுட்டுப் பொசுக்குகிறது.

நாவின் வரட்சியும், வேலையின் களைப்பும் அவனை மாறி மாறி சோர்வடையச் செய்தாலும், 'சிங்காரம் தண்ணீருடன்வருவான்' என்னும் நினைவின் துணிவில் இன்னும் நாலு மரம் வெட்டி விட்டான்.

"இன்னுமா ஏறி வார்ரான்" என்னும் சந்தேகத்துடன் மீண்டும் ஒரு முறை இழே பார்த்தான்.

மலைக்கு தண்ணீர் கொண்டு வந்த பையன்கள் திருப்பிப் போய்க் கொண்டிருந்தனர். ஒரு சிலர் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

'என்ன ஆச்சு இவனுக்கு. என்னும் நினைவுடன் கவ்வாத்துக் கத்தியை கக்கத்துக்குள் இடுக்கிக் கொண்டவன் தலைத்துணியை உருவி உதறி சுழுத்து நெஞ்சு முகம் முதுகு என்று அழுத்தித்துடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெளிவத்தை ஜோசப்

வண்ணம் வெட்டுப்படாத தேயி லையை இழுத்து நெறித்துக் கொண்டு மேலே ஏறினுன்.

ஆறேழு தேயிலை ஏற்ஞல் மேலே ரோட்டு. ரோட்டு வளைவில் ஊற்றுக்சான்.

இது அவனுக்கும் தெரியும். தண்ணீர் குடிப்பவர்களைப் பார்த் ததும் இவனுடைய தாகம் இவனை தள்ளிக் கொண்டு போகிறது. பாதையில் சிறிது நடக்கும் போதே 'சொர்ரென்று' ஊற்றும் தண்ணீ ரின் ஓசை குளிர்ச்சியுடன் ஓடி வந்து காதில் பாய்கிறது.

வாங்கியில் குத்தி வைத்தி ருந்த இரண்டு பெரிய தேயிலை இலை நுனியில் 'சர்ரென்று' ஊற் றிய நீர் பளிங்கு போல் மின்னி யது நாலு கை நிரப்பிக் குடித் தவன் இரண்டு கை நிரப்பி தோளுக்கு மேலாக முதுகில் விசி றிக் கொண்டான். பிறகும் குடித் தான்.

நீரொழுகும் முகத்துடன் நிரையில் வந்து நின்றவனுக்கு புதி தாக ஒரு தெம்பு வரதிருந்தது. மட மடவென்று வெட்டத் தொடங்கினுலும் சிங்காரம் ஏன் தண்ணி கொண்டாறலே' என்ற நினைவு மறுபடியும் மறுபடியும் எழுந்து கொண்டே இருந்தது.

★ ★ ★

ஆளுயரம் வளர்த்து அழகாக வெட்டப்பட்டு வேலியாய் நிற்கும் சப்பாத்துச் செடிகள் தேயிலை மலை யையும் ஆஸ்பத்திரியையும் பிரித்து வைத்துக் கொண்டாலும், மருத் துவசாலைக்கேயுரிய அந்த மணம் பலதரப்பட்ட மருந்துகளின் அந் தக் கலவை நெடி ஆஸ்பத்திரியை சுற்றியுள்ள தேயிலை நுனிகளில் இழைவதை தடுத்துக் கொள்ள முடியவில்லை.

எட்ட நடக்கும் போதே ஆஸ் பத்திரி கிட்ட இருக்கிறது என் பதை அந்த மணம் சாட்டி விடுகி றது,

கத்தரிக்கு அகப்படாத ஒரு சில மொட்டுக்கள் சிவப்பாய் பூத் துச் சிரிக்கின்றன வேலியில்.

வந்து போகும் நோயாளிகளைத் தவிர்த்து ஒரு அறுபதுக்கும் மேற் பட்ட நோயாளிகள் தங்கி இருக்க வசதி பெற்றது அந்த ஆஸ்பத்திரி. எத்தனையோ வைத்தியர்கள் வந்து போய் விட்டனர். சிங்களவர், தமிழர், முஸ்லீம் என்று. ஐந்து பேர் தங்கியிருந்து மருத்துவம் பெறப் போதுமானதாக; ஒரு சிறு மருத்துவ மனையாக இருந்தது இன்று இத்தனை பெரியதாக ஆகி யுள்ளமைக்கு இங்கு பணியாற்றிய ஒவ்வொருவருமே காரணமாகின் றனர்

கல்வி கொடுத்தோன் கண் கொடுத்தோன் என்பது போல் இது உயிர் கொடுக்கும் பணி.

இப்போது இருப்பவர் ஒரு யாழ்ப்பாணத்தவர். வேலி இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் பார்க்கும்போது தனது சின் னஞ்சிறிய அறையில் அமர்ந்து நோயாளிகளையும் பரிசோதித்துக் கொண்டிருக்கின்றாரே அவர் தான். ஆஸ்பத்திரி பெரிதென்றாலும் அவரு டைய அறை சிறியது தான்.

அவருடைய அறை இன்னும் பெரியதாக அமைந்துவிட்டால் தங்கி மருத்துவம் பெறவேண்டிய ஒரு நோயாளியை குறைத்துக் கொள்ள வேண்டிய சங்கடம் ஏற் படும் என்பதை அவர் அறிவார்.

பிரசவத்துக்காகப் பத்துப் பேரை தங்க வைக்கு மளவிற்கு அறைகளையும், பிரசவ அறையின் தரைக்கு 'மார்பல்' போட்டுக் கொண்ட பெருமையும் இவருடைய சேவையுள் அடங்குகின்றன.

காசு கொடுப்பது தோட்டம் தான் என்றாலும் எதற்குக் கேட்க வேண்டும் என்பது தானே விவஸ்த்தை.

ஆஸ்பத்திரியின் பின் புறத்தே ஒரு இருபது முப்பது யார் தொலை வில் நின்ற பலா மரம் இப்போது ஆஸ்பத்திரி பின் சுவரின் அருகே நிற்கிறது.

பலாமரத்தின் அடியில் பெரிது பெரிதாய் மூன்று அடுப்புக் கல்லும் கற்களின் மேல் ஓர் கரி பிடித்த அரை 'ட்றம்'மும் இருக்கின்றன.

பாவம் இந்தப் பலாமரம். முன் பெல்லாம் "தேயிலையை நிழலாக்கு கிறது. பழுத்த இலைகள் விழுந்து விழுந்து கொழுந்து அமுங்கிவிடுகின் றது" என்று காரணம் கூறி தேயிலை களுக்கு மேலாக விரிந்து நின்ற இலை களை பால் வடிய பால் வடிய வெட்டி மொட்டையாக்கிவிடுவார்கள்.

ஆஸ்பத்திரிக்கூரைக்கு மேலாக விரியும் கிளைகள் 'சர் சர்' ரென்று இலைகளும் கொப்புகளும் கூரைத் தகரத்தை வருட படர்ந்திருந்தன

ஆஸ்பத்திரிக் கட்டிடம் விரிய விரிய கூரைக்கு மேல் லாவகமாக ஆடி அசைந்த கிளைகளுக்கும் ஆபத்து வந்தது.

மரத்திலிருந்து கிளை பிரியும் இடத்தில் வைத்து ஒட்ட வெட்டி விட்டார்கள்.

கிளை பரப்பி நின்ற பலா மரத்தை மொட்டைப் பலா மர மாக்கிவிட்டான் மனிதன்.

அடி மரமும் இப்போது சூடு பட்டு சூடுபட்டு பொந்தாகிவிட் டது. கூரையிலிருந்து குதித்து வரும் அணில்கள் இந்தப் பொந்துக்குள் புகுந்து தேயிலைக்குள் ஓடி மறைகின் றன.

பலா மரப் பொந்துக்குள் கையை விட்டு மரத்தைக் கெட்டி யாகப் பிடித்து ஒரு உந்து உந்து தாவி ஏறினான் ஜினதாச.

ஆசுபத்திரிக்கு மருந்து வாங்க வருவதற்கு இது வழி இல்லை என்ற லும் இந்தப் பக்கமிருந்து வருகின்ற வர்கள் இப்படித்தான் ஏறிக் குதிப்ப துண்டு. பெரியவர் கண்டுவிட்டால் 'சள்'ளென்று விழுவதுடன் மருந்து தர மறுத்து விரட்டியும் விடுவ துண்டு.

பன்சலயிலிருந்து வந்த ஜின தாச அய்யாவுக்குத் தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்து, வந்து ஆட்களுடன் நின்று விட்டான். பிறகு முண்டியடித்து முன்னேறி அய்யாவின் முன் நின்று கையிலிருந்த கடிதத்தை நீட்டினன்.

" எப்படி ஜினதாச... தங்குவதற்குத் தயாராக வந்ததா...'' என்றபடி கடிதத்தைப் பிரித்துப் படிக்கின்ருர்:

நேற்று அவன் வயிற்றுவலி என்று வநதிருந்தபோது சோதித்துப் பார்த்தவர் "ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கவேண்டும். வலியை நிப்பாட்ட இப்ப மாத்திரை ரெண்டு தர்றேன்... உன்னை சோதித்துப் பார்க்கவேண்டும்... நீ போய் தங்குவதற்கு தயாராய் வா... ''என்று கூறி அனுப்பிஞர். அவன் இப்போது வந்து இந்தக் கடிதத்தை நீட்டுகிருன்.

பன்சலேயிலிருந்து பௌத்த குருவானவர் கொடுத்தனுப்பிய கடிதம் அது.

ஜினதாசவைத் தவிர வேறு யாராலும் அந்தப் பசுவிடம் பால் கறக்க இயலாதாம். ஆகவே காலே மாலே பால்கறக்க அவன் இருந்தாக வேண்டும் '' என்பதே கடிதம்.

டக்டரய்யாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. "பசு மாட்டிடம் பால் கறப்பதும் கறக்காமல் விடுவதும் எனக்குத் தேவையில்லே. வியாதியஸ்த்தனின் வியாதியைக் கண்டுபிடித்துக் குணமாக்குவதே ஒரு வைத்தியனின் வேலே. இஷ்டமென்ருல் இரு இல்லாவிட்டால் போ... ''

என்று கூறிவிட்டு எழுந்துவிட்டார். முன்னே நின்றுகொண்டிருந்தவர்கள் ஒதுங்கி வழி விட வாங்குகளில் குந்தியிருந்தவர்கள் எழுந்சது வணக்சம் கூற அய்யா வாட்டுகளைப் பார்க்க நடந்துவிட்டார்.

பிரசவத்துக்காக வந்திருப்பவர்களைப் பார்க்கும் நேரம் இது. கதவைத் திறந்து மூடிவிட்டு உள்ளே நுழைந்தார்.

சுற்றியுள்ள சேலேயையும் மேவி, நெஞ்சுவரை நிறைந்துவிட்ட வயிற்றுடன் முக்கி முனகி எழுந்திருக்க முயன்றவளை... '' ம்ம்.. எழும்ப வேண்டாம்... அப்படியே இரு.. '' என்று கையமர்த்தியவர் " என்ன பேரு '' என்ருர்.

" மூக்காயிங்க... ''

" இப்ப எப்படி இருக்கு,... மயக்கம் வருதா...? ''

" இல்லீங்க. . நேத்து சின்னய்யா ஏதோ ஒரு புது மருந்து குடுத்தாருங்க... அதுலேருந்து மசக்கை இல்லீங்க... ஆனுல் நிக்க முடியலே... கால்ல வெட வெடன்னு வருது... '' இந்தக் கொஞ்சம் பேசியதற்கே பெரிதாக மூச்சு விட்டுக்கொண்டாள்.

" புருசன் பேரு என்ன சொன்னே...? ''

" மூக்கையாங்க... ''

" அய்யா மூக்கையா அம்மா மூக்காயி. ரொம்பப் பொருத்தமா இருக்கு அது தான் வருசா வருசம் வந்துடுறே...''

மூக்காயி சிரிக்க முயன்று முடியாமல் வயிற்றைப் பிடித்துக் கொள்ளுகின்ருள்; முனகலுடன்.

" சிரிக்கையில வயிறு வலிக்குதா...? ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஆமாங்க அய்யா .. இனி சிரிப்பு காட்டாதீங்க... ''

' அதைப் பரிசோதிக்கத்தான் அப்படிச் சொன்னேன். உன்னைக் கேலி செய்ய இல்லே... '' என்றவர் அவளுடைய இமையைப் பிரித்து விழிகளையும் நாவையும் பார்த்துவிட்டு ''எத்தனையாவது'' என்ருர்.

'' நாலுங்க... ''

'' வைத்தியர் கிட்ட பொய் சொல்லக்கூடாது. இது எத்தனையாவது...? ''

''ஆண் ரெண்டு பொண் ரெண்டுங்க... ''

'' ஆக மொத்தம் நாலுங்கிறே... நான் லயத்துல இருக்குறதைப்பத்தி கேக்கலே... உன் வயத்தில இருக்குறதைக் கேட்டேன். ''

'' இது அஞ்சாவதுங்க. மத்த நாலும் சின்னஞ் சிறுசுக.. அதான்... ''

அவள் முடிக்குமுன் அய்யா வெடுக்கென்று கூறினுர். '' உனக்கு வேண்ணு வீட்டுல இருக்குற புள்ளைகளைப்பத்திய நெனைவு இருக்கலாம் கவலே இருக்கலாம்... என்னுடைய கவலே எல்லாம் உன் வயத்துல இருக்குற புள்ளையைப் பத்தித்தான்... ''

'' அய்யா கிட்ட ஒரு உதவி கேக்கணும்க ''

'' கேளு... ''

. ''நானு வீட்டுக்குப் போகணும்க! சாமி தொரை தான் மனசு வைக்கணும்... சுடு தண்ணி காய வச்சி குளிக்கணுங்க... ''

'' ஓஹோ... பழைய பல்லவி தானே... உனக்கு குளிச்சணும். அதுவும் சுடுதண்ணி வச்சுக் குளிக்கணும்... அதுக்கு நான் ஏற்பாடு செய்யிறேன். இங்கேயே பின்னுக்குக் குளிக்கலாம்.. நிக்க முடியலே நடக்க முடியலேங்குறது... அப்பறம் லயத்துக்குப் போறேங்குறது... '' என்றபடி அடுத்த கட்டிலைப் பார்க்கப் போய்விட்டார் அய்யா.

★ ★ ★

'' சிங்காரம்.. ஏய் சிங்காரம் '' என்று கூப்பிட்டபடியே லயத்தை அடைந்தான் மூக்கையா. அலுத்துக் களைத்து வந்தவனுக்கு வீடு வெறிச்சோடிக் கிடந்ததில் ஆத்திரம் வேறு.

சவ்வாத்துக் கத்தியையும் குட்டிச் சாக்கையும் அரைச் சுவற்றில வைத்துவிட்டு இஸ்தோப்பில் நின்று கண்களால் பிள்ளைகளைத் தேடினுன்.

லயத்துத் தொங்கலில் கொஞ்சம் சிறிசுகள் நொண்டிக் கோடு ஆடிக்கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் இவனுடைய சின்னதுகளும் இருக்கலாம் என்ற எண்ணத்தில் மறுபடியும் கூப்பிடப் போனவன், கோடிப் பக்கமிருந்து ஓடிவந்த சிங்காரத்தைக் கண்டதும் '' எங்கேடா கோடிப்பக்கமிருந்து ஓடியாரே '' என்று கோபமாகக் கேட்டான்.

களைத்திருந்த நேரத்தில் மலைக்கு தண்ணீர் கொண்டுவராத கோபம், மூக்காயி இன்றைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லே என்னும் ஏமாற்றம் எல் லாமாகச் சேர்ந்து அவனைச் சீண்டின.

'' கோழிக் குடாப்பை மூடப் போனேம்பா... கூப்பிட்டியோ..'' என்றவாறு அவனிடம் வந்து நின்று கைகளைப் பிசைந்தான் சிங்காரம்.

'' கூப்பிடலே... வெளக்குபாத் தக்குப் பட்டுக் குஞ்சம் கட்டுன மாதிரி பேர் வச்சிருக்காள்ல ஒங்க ஆயா... அதை வாய் நெறைய சொல்லி மகிழ்ந்துகிட்டேன்.. ஏண்டா மலேக்குத் தண்ணி கொண் டாறலே... ''

விருட்டென்று அவனைக் கடந்து உள்ளே ஓடிய சிங்காரம் '' இந்தா பாருப்பா... தேத்தண்ணியைப் போத்தல்லே ஊத்தி குட்டிச் சாக் குல எல்லாம் போட்டு வச்சிருக் கேன்... ஆனு... ஆனு... ''

பதறிப் போனுன் மூக்கையா. '' ஆனு என்னடா... என்ன நடந் துச்சு.., எங்கே ஒங்கக்கா எங்கே... சந்திரபோசு... '' என்று அவசரமா கக் கேட்டான்.

'' தண்ணியெல்லாம் ரெடி பண்ணிகிட்டு தம்பி வரக்காட்டியும் இருந்தேனுப்பா... பள்ளிக்கொடத் துல இருந்து வரயில சந்திரபோசு கால்ல ம்பாத்தல் ஒடு வெட்டி... ஒழுகுற ரத்தத்தோட ஓடியாந் தான... ''

'' அடப்பாவி அவனுக்கென்ன கண்ணு பொட்டையா இல்லே பொரடில இருக்கா.., பார்த்து வரக்கூடாது...இப்ப எங்கடா... ''

'' நானு சீலேத் துணியால சுத்தி சுத்திப் பார்த்தேன் நிக்கலே ரத்தம்... டச்சத்து விடடு டாபா ஓடியாந்து பாத்துட்டு அடப்பாவி இப்படிப் பொளந்திருக்கு இதுக்கு நீ கட்டுப் போடுறியோன்னு அவ னைத் தூக்கிக்கிட்டு ஆசுபத்திரிக்கு போயிறிச்சி . ஆசுப்பத்திரிலே ருந்து வந்ததும் ஒனக்கு தண்ணி கொண்டாறுவோம்னு இருந்தேன்.. இன்னும் காணலே.. ''

பன்னிரண்டு வயது கூட நிறை யாத சிறுவன் சிங்காரம் பரிதாப மாக நின்றான். அவன் கண்களில் ஒரு பயம்... அப்பாவிடம் இருந்து எதையோ மறைக்கும் பயம் படர்ந் திருந்தது.

'' இந்த அடுப்பு மொடையெல் லாம் கூட்டிப்போடு.. ஒரே சாம் பலா செடக்கு... என்ன இது இப் படி அடுப்பெல்லாம் தண்ணி ஊத் திக்கெடக்கு... '' என்றபடி தொட் டிலேத் திருப்பிவிட்டான். இவ்வ ளவு நேரமாக ஈரத்தில் கிடந்தது தொட்டில் திரும்பியதால் வில்லாய் வளைந்து சிலிர்த்தது.

தொட்டிலுக்கு வெளியே நீண்ட கால்களை உள்ளே தள்ளி துணியை இழுத்து விட்டவன் '' ஆட்டி விடு '' என்று கூறிவிட்டு வெளியே வந்தான்.

மனைவி இல்லாத வீடு இப்ப டித்தான் அலங்கோலமாய் இருக் கும்.

கை கால் அலம்பிக்கொண்டு அவன் வருவதற்குள் சிங்காரம் சாப்பாட்டை எடுத்து வைத்தான். '' நீங்கள்ளாம் சாப்பிட்டாச்சா..''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்மிகு மலையகம் சௌமியம் காண
அன்புடன் வாழ்த்துகிறோம்!!

# லங்கா இலக்ரிகல்ஸ்

மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்

125, B. திருகோணமலை வீதி,
கண்டி.

தொலைபேசி: 23213 - 32103

---

*சௌமியம் அழகொளி பரப்பி
மலையகம் செழிப்புற
எங்கள் இனிய நல்வாழ்த்துகள்*

# சரஸ்வதி லாட்ஜ்
# சைவ ஹோட்டல்

*191, காலி வீதி, பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4.*

தொலைபேசி: 581913

சௌமியம் ஒளிபரப்பி

சீரும் சிறப்பும் பெற

எங்கள் வாழ்த்துகள்!

★ ★ ★

**கிறீன்லண்ட்ஸ் கபே,**

59, யட்டிநுவர வீதி,

கண்டி.

தொலைபேசி: 08 - 23221

---

இ. தொ. கா. மகாநாடு

தனிப் பெரும் சிறப்புடன்

நடைபெற வாழ்த்துகிறோம்!

**சென்ரல் ஏஜன்சிஸ்**

(பிரைவேட் லிமிட்டெட்)

இறக்குமதியாளர், வழங்குநர்

குத்தகையாளர்.

91, கொட்டுகொடல்ல வீதி,

கண்டி.

தொலைபேசி: 32290 - 24203

---

இ. தொ. கா. மகாநாடு

வெற்றி பெற

வாழ்த்துகிறோம்!

# முஸ்லீம்

# ஹோட்டல்

த. பெ. 75

66 - 72, தளதா வீதி,

கண்டி.

---

## சௌமியம் சிறப்புற

## எங்கள்

## வாழ்த்துகள்!

நலம் விரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடத் தொடங்கு முன் கேட்டுக்கொண்டான் மூக்கையா.

ஆம் என்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டினுன் மகன் அத்துடன் '' சந்திரபோசு இன்னும் சாப்பிடலைப்பா '' என்றும் கூறிவைத்தான்.

அவனல் சாப்பிடமுடியவில்லை. இருந்தாலும் பசித்த வயிறு,-களைத்த உடல்- சாப்பிடத் தூண்டியது. ''நான் போயி பேரு போட்டுட்டு அப்படியே ஆயாவைப் பாத்துட்டுத்தான் வருவேன்... தம்பி வந்ததும் சாப்பாடு கொடுத்து படுக்கவை... உங்கக்கா; தங்கச் சிக்கு விஸ்கோத்து எதும் ஊட்டுச்சா.. எங்கேடா அந்தச் சனியன் கூட்பிடு அதை '' என்று சத்தினன்.

'' ஊட்டுச்சுப்பா .. ஊட்டிப் படுக்கப் போட்டுட்டுத்தான் வெளே யாடப் போச்சு... எத்து மாங் கொட்டைப் பாயுதுப்பா... இப் போதிக்கு வராது... இன்னும் மூணு நாலு கோடு இருக்காம் '' என்று அப்பாவிடமிருந்து எதையோ மறைக்கும் பயத்துடன் கூறினன் மகன்.

''சரி சரி வெளேயாடட்டும். இதுக்குள்ளே வந்து நொளேஞ்சிகிட்டுத்தான் என்னத்தைப் பண்ண '' என்றவாறு சாப்பிடத் தொடங்கினன்.

★ ★ ★

மூக்கையா ஆஸ்பத்திரியை அடைந்தபோது பெரியவர் பிரசவ வார்ட்டின் உள்ளே இருந்து வெளியே வந்தார்.

இந்த நேரத்தில் அவன் அவரை அங்கு எதிர்பார்க்கவில்லை.

'' யாரு... மூக்காயி புருசனு. சம்சாரத்தைப் பார்க்கவந்தியா... சரி சரி பாத்துட்டுப்போ..'' அய்யா வெளியே நடக்க அவன் உள்ளே நுழைந்தான்.

முனகியபடி கட்டிலில் படுத்திருந்த மூக்காயி சணவனைக் கண்டதும் எழுந்து அமர்ந்தாள்.

'' என்ன புள்ளே என்ன பண்ணுது... இன்னிக்கும் கௌம்பலியா...''

'' அய்யா போயிட்டாரா...?'' ரகசியமாக்க கேட்டாள்.

'' போயிட்டாரு... என்ன சொல்றுரு ..''

'' லயத்துக்கு அனுப்ப மாட்டேங்குறுரு...''

'' அவரு பாட்டுக்கு ஒன்னே ஆசுபத்திரிலே உக்காத்தி வச்சிக் கிறுவாரு... அவருக்கென்ன... எனக்குல்ல தெரியும் நான் படுற பாடு...''

'' ஏன் எனக்குத் தெரியாதா வேலைக்கும் போய்க்கிட்டு அந்த நாளை டயும் நீ கயிஷ்டப்படு வேன்னு... அதுக்காகத்தானே எப்புடியாச்சும் கேட்டுக்கிட்டு வந்துடலாம்னு நெனேக்கிறேன். லயத்துக் குப் போயி சுடுதண்ணி வச்சிக் குளிக்கணுமுங்கன்னு கொட கேட டுப் பாத்தேன். இங்கேயே வச்சித் தர்றேன்ங்குறுரு...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' அதெல்லாம் நமக்குத் தெரியாது. நீ சொகுசா இங்கேயே செட ந்தக்குறு.. புதுசா வர்ற இதைப் பெத்துச்கிட்டு நீ அங்கே போர்றதுக்குள்ளே அங்கே இருக்குற நாலுல ரெண்டொன்னு போயிறும்..''

'' அப்படி எல்லாம் சொல்லாதே..'' அவள் உடலில் ஒரு புதுப்பலம் எப்படித்தான் வந்ததோ தெரியாது விருட்டென்று எழுந்து அவன் வாயைப் பொத்தினுள்... அவன் தொடர்ந்தான்.

'' ராசாமணி... ஓம் மக... அடுப்புலேருந்து சேத்தலேத் தூக்குறேன்னு கொதிக்கிற தண்ணியை காலுல ஊத்திக்கிட்டிருக்கு... காலெல்லாம் கொப்புளிச்சுப் போயி... இந்தச் சிங்காரம் பய என்னடான்னு அதுக்கு வாழைப் பட்டையைப் புளிஞ்சு தேய்ச்சி கோழிக்குடாப்புக்கு பின்னுல குந்த வச்சிட்டு எத்து மாங்கொட்டை வெளையாடுதுப்பான்னு என்கிட்டயே சமாளிக்கிறுன். சந்திரபோசு கால்ல போத்தலோடால பொளந்துகிட்டு...''

'' அய்யோ... போதும்... வேற ஒன்னும் சொல்லாதே... நானு அய்யாகிட்ட செஞ்சிக் கௌளிகௌம்பிடுறேன்... நீ போயி அய்யாகிட்ட சொல்லு. இப்ப ஆபீசுலதான் இருப்பாரு...'' என்றபடி தன்னுடைய உடுப்பு இத்தியாதிகளே சேகரிக்கத் தொடங்கினுள்.

மூக்கையா மெதுவாக டக்டரய்யாவின் ஆபீஸ் அறையை நோக்கி நடக்கிறுன்.

நோயாளிகளைப் பார்க்க வந்தவர்கள் ஆஸ்பத்திரி வராந்தையில் நடந்து கொண்டிருக்கின்றனர். இரண்டொருவர் மாத்திரமே டக்டரய்யாவின் அறையில் நிற்கின்றனர்.

மூக்கையாவும் வந்து அய்யா முன் நின்றுன்.

'' செலாங்கையா ''

'' யாரு... மூக்கையாவா... என்ன வேணும்...?'' எழுதிக் கொண்டிருந்த பேனையை புத்தகத்தின் மேல் வைத்துவிட்டு கதிரையில் சாய்ந்து அமர்ந்தபடி சாவகாசமாகக் கேட்டார் அய்யா.

மொட்டைப் பலா மரத்தின் பக்கமிருந்து தோட்டத்து லொறியின் ராட்சச முனகல் சப்தம் கேட்டது.

'' கொஞ்சம் நின்னுக்கிறு மூக்கையா '' என்று எழுந்தவர் அறையின் வாசலில் நின்று ''வாட்லி..'' என்று பலமாகக் கூப்பிட்டார்.

மருந்தறைக்குள் கைவேலேயாக இருந்த பையன் ஓடி வந்து அய்யா முன் நிற்க '' ஆறுவது கட்டில் நாகம்மாவை ரெடி பண்ணு... பெரியாஸ்பத்திரிக்கு அனுப்ப... லொறி வந்தாச்சு...நீயும் லொறிலே போகணும்... '' என்றவர் திரும்பி வந்து அமர்ந்தபடி '' இப்ப சொல்லு மூக்கையா...'' என்றுர்.

'' சம்சாரத்தைக் கூட்டிக்கிட்டுப் போகணும்க... வீட்டுல சின்னஞ்சிறுசுகளே வச்சிகிட்டு ஒரே கறைச்சல். அய்யாவுக்கே தெரியும் பகல் எங்க சந்திரபோசு காலேப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொளந்துகிட்டு வந்திருந்தான் மருந்து கட்ட....''

''அதுக்சாக! இதெல்லாம் நீ சமாளிச்சுக்கிறனும். என்னாலே ஒன்னும் செய்யேலாது. வாயும் வயிறுமா இருச்கிறவளை தாயும் பிள்ளையுயா ஒங்கிட்ட சேர்க்கிறது என்வேலை. அதுக்கு ஏதாவது எடைஞ்சல் வர்றதை நான் அனுமதிக்க ஏலாது...''

கல்லைப் போன்ற முகத்திலிருந்து திடமான வார்த்தைகள் வெளிவந்தன.

''இந்தப் புள்ளையப் பெத்துகிட்டு இவ அங்க வரக் காட்டியும் அங்க இருக்சகிறதுல ஒன்னு ரெண்டுக்கு என்னமாச்சும் ஆயிடுங்க. அதுதான் பயப்புடுறேன்...''

கன்னத்தை உப்பி முகத்தைப் பலூன் மாதிரி வைத்துக்கொண்டிருந்த டக்டரய்யா டக்கென்று கேட்டார் ''நீ கூட்டிக்கிட்டுப் போறதுனால் தாய்க்கே என்னமாச்சும் ஆயிட்டா... இப்பவே மூக்காயிக்கு உடல் ரொம்ப பாதிப் படைஞ்சு இருக்கு.. ரெத்தசோகை வேறெ...''

''கடைசிக் கொழந்தை தொட்டில கெடக்குங்க... அதைப் பாத்துக்கிறதுக்கே ஒரு ஆளு தனியா வேணும்... நான் வேலைக்குப் போகணும்... இல்லாட்டி பேர் இல்லே...''

தன்னுடைய கடைசி அஸ்திரத்தைப் பாவிக்கிறான் மூக்கையா.

அய்யா மேசையில் இருந்த நீண்ட குச்சியை கையில் எடுத்து, கதிரையின் பின்னால் சுவற்றில் தொங்கும் படத்தை குச்சியால் எட்டித் தொட்டு ''இது என்ன தெரியுமா உனக்கு...'' என்று கேட்கின்றார்.

சுவரில் தொங்கும் படம் ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றின் உள்பாகம்.

ஒரு புதிய உயிர் எப்படி உண்டாகிறது என்பதை விளக்கும் படம்.

இடைவெளி இன்றி குழந்தை பெறுவதால் தாய்க்கும் சேய்க்கும் உண்டாகும் பாதிப்புக்கள் பற்றிய குறிப்புகள் சிவப்பில் தடித்த எழுத்தில் இருந்தன.

'இரு பிள்ளைகளுக்கான கால இடைவெளி குறைந்த அளவு ஐந்து வருடங்கள் இருப்பது சிறப்பு' என்னும் வரிகளில் அய்யா நீட்டிய குச்சியின் நுனி நிற்கின்றது.

''இதெல்லாம் பத்தி நாங்க சொல்லிக்குடுக்கையில ஒருத்தரும் கவனிக்கிறது இல்லே...'' என்று இன்னும் ஏதேதோ கூறிக்கொண்டிருந்தார் அய்யா.

இதொன்றும் மூக்கையாவின் செவியில் நுழைவதாக இல்லை.

'மனைவியை எப்படியாவது கூட்டிப் போய்விடவேண்டும்' என்பது மட்டுமே மனதில் இருந்தது.

அய்யா தொடர்ந்தார். ''இதோ பாரு ஒன் சம்சாரத்தையும் நாகம்மாளோட சேர்த்தே பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பத்தான நெனைச்சிருந்தேன். பெறகுதான் இன்னொரு கெழமை இங்கேயே வச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிக்கலாம்னு முடிவு செய்சிருக்கேன் நீ என்னடான்னு ''

'' இது என்னங்கய்யா மொதப் பிரசவமா? இல்லே புதுப் பிரசவமா,. அவளும் நாலைப்பெத்திருக்காள்ல. அந்த நாலும் சின்னஞ் சிறிசு அதனால் தான்... ''

'' இதோபாரு மூக்கையா மடத்தனமா பேசாதே பத்தைப் பெத்தவ பதினொன்னுவதைப் பாதையிலயா பெப்பா; அதையும் ஆஸ்பத்திரியிலதான் பெக்கணும் பிரசவம்ங்கிறது ஒரு ஜீவ மரணப் போராட்டம்... உனக்கெல்லொம் அதை வெளங்கப்படுத்த என்னால முடியாது '' அய்யாவின் குரலில் எரிச்சல் தெறித்தது.

'' ஐயா சொஞ்சம் கருணை வைக்கணும்... வீட்டுல பிரச்சினை கூடங்க... அதால சபாளிக்க ஏலாதுங்க. . ''

குறுக்கே புகுந்தவள் மூக்காயி.

'' ஓஹோ. . அய்யா வூட்டு தாளத்துக்கு அம்மா ஒத்தூதுறீங்களோ... சரி சரி யாரையும் கட்டாயப்படுத்தி வாட்டுல நிப்பாட்டிக்கிற என்னால ஏலாது. உங்க உங்க நலவுக்காகத்தான் இவ்வளவும் சொன்னேன் பிறகு உங்க இஸ்டம் .. '' என்று கூறியவர் ஒரு நீளமான ரெஜிஸ்டரை இழுத்தெடுத்தார்.

'' டே-ஷண்ட் ரெடி சர் '' என்று வாட்லி வந்து நின்றான்.

'' இந்தா மூக்கையா இந்த எடத்துல கைஎழுத்துப் போடணும் நீயும் போடணும் '' என்று மூக்காயியை ஏறிட்டுப் பார்த்தவர் '' இந்தா மூச்சையா கடைசியா சொல்றேன்... வயித்திலே இருக்கிறதும் லயத்திலே இருக்கிறதும் ஒண்ணில்லே. அதை யாரு வேணுமின்னாலும் பார்த்துக்கிறலாம்... இதைப் பாக்கிறது அப்படியில்லே... '' என்றவர் திடுக்கிட்டு எழுந்தார்.

பேய் பிடித்தவன் போல் அலங்கோலமாக ஓடிவந்த ஓட்டுலயத்து மாரிமுத்து அவர் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவர் காலடியில் விழுந்து கதறினான்.

ஒரு மாசத்துக்கு முன் இதே போல் அய்யாவிடம் சண்டை பிடித்தது மட்டுமல்லாமல், '' நீ ஏன் என் பொண்டாட்டியை வீட்டுக்கு அனுப்ப மாட்டேங்கிறது எனக்குத் தெரியும். . '' என்று போதையுடன் கத்திவிட்டுப் போனவன் இந்த மாரிமுத்து.

'' அய்யா என்னை மன்னிச்சுருங்க. என் பெஞ்சாதியைக் காப்பாத்துங்க... ஏவூட்டு சின்னஞ்சிறுசுகளை அனாதையாக்கிட்டுப் போயிறுவா போல இருக்குதுங்க '' என்று மன்றாடினான், மாரி.

' கைவாளியில் தண்ணீர் தூக்கி வந்தவள் கால் தடுமாறி விழுந்திருக்கிறாள். வயிற்றில் அடிபட்டுவிட்டது. பிரசவத்துக்கு இந்தா அந்தா என்றிருந்தவள். பிறகு கேட்பானேன். பேச்சு மூச்சு இல்லை வயிறு தனியாகக் கிடப்பதுபோல் சுருண்டு கிடந்திருக்கிறாள். நெஞ்சு ஏறி இறங்குவதில் இருந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

அறிவொளி வீசும் இதழாக

சௌமியம் மலரட்டும்

வாழ்த்துகிறோம்!!

★

எஸ். எம். கந்தசாமி பிரதர்ஸ்

கலகா

---

இ. தொ. கா. வின்

மாத இதழ் சௌமியம்

சிறப்புற

எங்கள் வாழ்த்துகள்!

மெனிக்வத்தை எஸ்ரேட்

ரொசெல்ல

★

இன்னும் உயிர் இருக்கிறதை உணர முடிந்திருக்கிறது. கருவிழிகள் மேலிமைக்குள் செருகி செருகி வருகின்றன. கூடி இருந்தவர்களும், சின்னஞ் சிறுசுகளும் குய்யோ முறையோ என்று கதற இவன் பதறிப்போய் ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்து அய்யா காலடியில் சரணடைந்துவிட்டான்.

"நான் என்னமாச்சும் தவறு செஞ்சிருந்தா அய்யா பெரிய மனசோட என்னை மன்னிச்சிடுங்க... இப்ப உங்களைத்தான் கடவுளா நெனைச்சி ஓடி வந்திருக்கேன் என் புள்ளைகுட்டிகளை அனாதை ஆக்கிடாதீங்க"

நெருப்பில் நிற்பவன் போல் துடித்துக்கொண்டிருந்தான் அவன். ஓடும் ஒவ்வொரு விநாடியும் அவனை விழுங்கி விழுங்கி வெளிவிட்டன.

"பேஷண்ட் ரெடி சர்" என்று வந்து நின்ற 'வாட்லி'யைப் பார்த்து அய்யா சொன்னார் "நாகம்மா அப்படியே இருக்கட்டும் ரெடியாக்கிவை."

லொறி டிரைவர் வந்து எட்டிப் பார்த்துத் தன்னை ஆஜர் படுத்திக் கொண்டான்.

"இதோ பாரு நீங்க ரெண்டு பேரும் இந்த ரெஜிஸ்டர்லே கை எழுத்துப் போட்டுட்டுப் போகலாம்... பெறகு ஓடிவந்து சாமி கடவுளேன்னு காலைப் புடிச்சாலும் பாரம் எடுக்க மாட்டேன்! வாட்லி சின்னவரை வரச்சொல்லி கை எழுத்தை வாங்கச் சொல்லு" என்றவர் மாரிமுத்துவை ஏறிட்டு நோக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடாவடிக்காரன் கூட ஆபத்து என்றதும் பரிதாபத்துக்குரியவனாகி விடுவதை உணர்ந்தார்.

மாரிமுத்து தலைகவிழ்ந்து நின்றான். "சரி சரி போய் லொறில ஏறு நான் வந்து பாக்குறேன". என்று அவர் சொன்னதும் சிலிர்த்துப் போனான். இவ்வளவு நேரம் சமாளித்துவிட்ட கண்கள் பொல பொலவென்று சொட்டத்தொடங்கின தடுமாறிப் போனவன் கண்ணீர் தெரியாமல் மறைத்தபடி தழு தழுத்த குரலில் "அய்யா நல்லாருக்கணும்" என்றபடி நடந்தான்.

தான் அன்றைக்கு அய்யாவை அவமரியாதையாகப் பேசியதற்காக அவர் இன்று தன்னை ஆஸ்பத்திரியில் இருந்து விரட்டுவார் என்ற பயத்துடன்தான் வந்தான்.

டக்டரய்யா லொறியை நோக்கி நடந்தார்.

மூக்கையா மனைவியைப் பார்த்தான்! முட்டிக்கொண்டிருக்கும் அவள் வயிற்றைப் பார்த்தான! லெறியில் ஏறி உட்காரும் அய்யாவைப் பார்த்தான்.

நிற்க சங்கடப்பட்ட அவள் வாங்கில் உட்கார்ந்துவிட்டாள்.

மொட்டைப் பலாவைத் தாண்டி தேயிலைகளுக்குள் ஓடி மறைந்தது தோட்டத்து லொறி.

ஜன்னல் வழியே சீறிக்கொண்டு வந்த காற்று அய்யாவின் மேசை மேல் விரிந்து கிடந்த ரெஜிஸ்டர் தாளுடன் படபடத்து மறைந்தது. புத்தகத்தை மூடி வைத்த 'வாட்லி' மூக்கையாவைப் பார்த்தான். பிறகு வெளியே வந்தான்.

"சின்ன டக்டரய்யாவை வரச் சொல்றேன்" என்றது பார்வை. "அதற்காகத்தான் போகிறேன்" என்றது நடை.

"சின்னவரை வரச்சொல்லா தேப்பா பெரியய்யா வரக் காட்டியும் நாங்க இருக்கோம்" என்றவன் மனைவியின் அருகே வாங்கில் உட்கார்ந்து கொண்டான்.

தூரத்தே மலைகளுக்கடியில் விழுவதும் சற்று மேலெழுவதுமாக ஜாலம் காட்டிக்கொண்டிருந்தான் கதிரவன். அந்த ஜாலம் - அந்த ரம்யம் வார்த்தைகளுள் கட்டுப்படாத அதன் கம்பீரம் - அந்தியில் விழுந்தாலும் அடுத்த நாள் அதே தேஜசுடன் - அதே ரம்யத்துடன் - அதே கம்பீரத்துடன் ஒரு புதிய உயிராய் எழலாம் என்பதை அடையாளமாக்கிக்கொண்டிருந்தது.

★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி 15ம் திகதி,

மாட்டுப் பொங்கல் நாள்,

மாலை 6.30 மணி,

வீடு கலகலப்பாக அமர்க்களட் பட்டது.

உறவினர்களும், நண்பர்களும் வீட்டை நிறைத்துக்கொண்டிருந் தார்கள். அனைவருக்கும் இரவு விருந்து தயாராகிக்கொண்டிருந் தது. எனக்கு ''சுருக்'' கென்று அப் போது தான் நினைவு வந்தது.

இரவு விருந்துக்கு முக்கியமான ஒன்றை வாங்கிவைக்க மறந்துவிட் டேன். வந்திருந்த சில பெரியவர் களுக்கு அந்தப் பழக்கம் அதிகமில்லை யென்றாலும் ''நல்ல நாள்.... பெரு

# பயங்கரவாதியைப் பிடித்த பொலிசார் பெருமிதம்?

நாள்'' நாட்களில் மட்டும் பாவிப் பதாக சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு அரைப்போத்தல் இருந் தால் சமாளித்து விடலாம்.

அவசரமாக சட்டையை எடுத் துப் போட்டுக்கொண்டு ''இதோ வந்துவிடுகிறேன்'' என அம்மா இருக்கும் திசையை நோக்கி ஒரு சத்தம் போட்டுவிட்டு வேகமாக வெளியே பாய்ந்தேன்.

எதிர் வீட்டில், வெளியே நின்று பேசிக்கொண்டிருந்த இரண்டு நண்பர்களை ''டவுனுக்கு போய் வருவோம்'' என அழைத் துக்கொண்டு கடையை நோக்கி நடக்கும்போது இரவு மணி ஏழு.

நேராக சாராய கடைக்குப் போய் யாரும் பார்த்து விடுகிறார் களோ என்று சுற்றி நோட்ட மிட்டுக்கொண்டே, கூச்சத்துடன் காசைக் கொடுத்து அரைப்போத் தலை வாங்கி சாரத்தில் மறைத்து வைத்துக்கொண்டு யார் கண் ணிலும் பட்டுவிடக்கூடாதென்ற பசப் புத்தல் வேசயாக வீட்டை நோக்கி நடந்தேன்.

வீட்டுக்கும் சாராய கடைக்கும் நூறு யார் தூரம் தான் இருக்கும். பிரதான பாதையிலிருந்து ஒரு குறுக்குப் பாதையில் ஏறினால், வீடு தான்!

வீட்டை அண்மித்து விட் டோம். அந்த நேரத்தில், பின்னால் யாரோ வேகமாய் வருவதை உணர்ந்தேன்.

யாரோ என் சேட்டின் கழுத் துப்பகுதியை பிடரியோடு சேர்த் துப் பிடித்து இழுத்த வேகத்தில் அப்படியே பின்னால் சரிந்தேன்.

என்ன நடந்தது என்பதை உணருமுன்பே,

என்னோடு வந்த இரண்டு நண் பர்களும், இன்னும் இருவரின் பிடி யிலகப்பட்டு திணறுவதைக் கண் டேன்.

''ஐயோ '' என்று கத்து வதற்கு முயற்சித்தேன். தொண்டை அடைத்துக்கொண்டு சத்தம் வெளியே வர மறுத்தது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில், வெள்ளை வேன் ஒன்று மிக மெதுவாக ஊர்ந்து வந்து எங்களுக்கருகில் நின்றது.

''... ம்... ஏறு வேனில்...''

என்று ஒரு அதிகார முரட்டுக் குரல் உறுமியது.

நான் வெலவெலத்துப் போய் விட்டேன்.

என்னோடு வந்த நண்பனில் ஒருவன் பயந்த சுபாவமுள்ளவன்.

அவன், ''ஐ. ... மாத்தியா...'' என்று தளதளத்த குரலில் பரிதாபகரமாகக் கேட்டான்.

இன்னொரு தரம் மிரட்டினால், மிரட்டியதற்கு மன்னிப்பு கேட்கிற வரை அழுவான்... அப்படியொரு சின்னப் பிள்ளைத்தனம்.

''பேசாதே டா.... ஏறு.....'' என்று இடிபோல் ஒரு குரல் அதிர்ந்தது. அந்த சத்தத்தோடு என்னோடு வந்த நண்பன் கோழிக் குஞ்சைப் போல் வேனுக்குள் தூக்கி வீசப்பட்டான். பொத்தென்று சுருண்டு விழுந்தவனைக் கண்டதும் ஒரு கணமேனும் தாமதியாமல் நானும் வேனுக்குள் பாய்ந்து ஏறிக்கொண்டேன், அடுத்த கணம்... மற்ற நண்பன் என் காலடியில ''ஐயோ'' என்ற சத்தத்தோடு சொத்தென்று விழுந்தான்.

வேன் கதவுகள் பட்டென்று மூடப்பட்டன.

எங்களின் இரண்டு பக்கமும் இரண்டு முரடர்கள் அமர்ந்தார்கள். அவர்களின் கையில் சிறு கைத் துப்பாக்கிகள் மின்னிக் கொண்டிருந்தன.

''தலையைக் குனிந்து படுங்கடா ...'' என்று கத்தினான்.

நான் சீட்டில் உட்கார்ந்து கொண்டே குனிந்து தலையை இரண்டு முழங்கால்களுக்கும் இடையில் புதைத்துக்கொண்டேன்.

வேன் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் தலையை இலேசாகத் தூக்கி ஓரக் கண்ணால் பார்த்தேன்.

என்னைப் போலவே எனது நண்பர்களும் தலையைக் குனிந்து படுத்துக்கொண்டே வருவதைக் கண்டேன்.

சும்மா வீட்டிலிருந்தவர்களைக் கூட்டி வந்து இப்படி வம்பில் மாட்டிக்கொள்ள காரணமாகி விட்டோமே என்று நினைக்கும்போது மனதை என்னவோ செய்தது.

யார் இவர்கள்.....?,

எங்களை எங்கே கடத்திக் கொண்டு போகிறார்கள்?....

## உண்மைச் சம்பவம்

எனக்கு எதுவுமே புரியவில்லை.

என் மனதில், அழுகை.... பயம்.... நடுக்கம் எல்லாமே ஏற்பட ஆரம்பித்தது.

குனிந்துகொண்டே இருந்ததால் முதுகு ''விண்'' ணென்றுவலித்தது.

மெலல தலையைத் தூக்கினேன்.

''நங்''கென்று தலையில் பலமாக ஒரு குட்டு விழுந்தது.

வலித்த தலையைத் தேய்ப்பதற்சாக கையைத் தூக்கினேன்.

''பளீ''ரென்று முதுகில் ஒரு அடி.

இதற்கு மேலும் தலையைத் தூக்க எனக்கென்ன பயித்தியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌமியம் மலையகம் சிறக்க
பொலிகவென
வாழ்த்துகிறோம்.

ஸ்ரீலண்ட்
டிரேடிங் கம்பெனி
136, கொழும்பு வீதி,
கண்டி.
தொலைபேசி: 24534

சௌமியம் நாட்டில் ஒளிபரப்ப
எங்கள் வாழ்த்துகள்.

நலம் விரும்பி.

மாபெரும் இ. தொ. கா. மகாநாடு
சிறப்புடன் நடைபெற
எங்கள் வாழ்த்துகள்

சௌமியம் வளர்க

ஸ்ரீலங்கா பார்மசி லிமிடெட்
39, டி. எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.

இ. தொ. கா. மகாநாடு
சிறப்பாக நடைபெற
எங்கள் வாழ்த்துகள்.

நலம் விரும்பி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தொ. கா. வின் அன்பிற்குரிய
சௌமியம் சிறப்புற
எங்கள் நல்வாழ்த்துகள்.

**அம்பாள் கபே**

100, 102, 104, ஆமர் வீதி,
கொழும்பு-12.

தொலை பேசி: 3 3 6 5 6



மகாநாடு சிறப்புப் பெறவும்
சௌமியம் பொலிவுறவும்
எங்கள் வாழ்த்துகள்

**வீனஸ் பிக்டர்ஸ் &**
**ஏஜன்சீஸ்**

78/3, மார்க்கட் வீதி,
வத்துகாமம்.



சௌமியம் புதுமைப் பொலிவுடன்
மலர
எங்கள் நல்வாழ்த்துகள்.

**ஜயசுந்தர ஹாட்வெயார்ஸ்**

இரும்பு விற்பனையாளர்

202, டி. எஸ், சேனநாயக்க வீதி.
கண்டி.



மலையகத்தில் அறிவொளி பரப்பும்
இதழாக சௌமியம் மலர
வாழ்த்துகிறோம்.

**நவலங்கா டிரேடிங் ஏஜன்சீஸ்**

9A, மாத்தளை ரோடு,
வத்துகாமம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே படுத்துவிட்டேன்.

ஒரு ஐந்து அல்லது பத்து நிமிடங்களின் பின்,

ஒரு குலுங்கலுடன் வேன் நின்றது.

கதவுகள் திறக்கப்பட்டன.

''இறங்குங்கள்....'' என்று ஊத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மூவரும் இறங்கினோம்.

சுற்றி நோட்டமிட்டேன்.

அது ''லிந்துல'' கடை வீதி என்பதை உடனே புரிந்து கொண்டேன்.

அங்கிருந்து லிந்துல பொலிசுக்கு நடத்தி செல்லப்பட்டோம்.

என் முதுகில் ஒரு துப்பாக்கி முனை அழுத்திக்கொண்டிருந்தது.

லிந்துல பொலிஸ்நிலையம் சென்றதும் எங்களை அழைத்து வந்தவர்களில் ஒருவர் ஒரு பொலிஸ் அதிகாரியோடு என்னவோ பேசினார்.

உடனே அந்த அதிகாரியின் முகம் இறுகியது.

பயங்கரமாக ஏதோ நடந்துவிட்டதைப் போல் பதட்டமடைந்தார்.

பொலிஸ் அதிகாரிகளை அழைத்து ஏதேதோ உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

எல்லாப் பொலிஸ் அதிகாரிகளும் எங்கள் மூவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

அவர்கள் முகத்தில் ஏதோ ஒரு வித இனந்தெரியாத உணர்வுகள் வெளிப்பட்டன.

அது கோபமா.... பயமா.... வெறுப்பா... புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்த நேரத்தில்,

எங்களை நோக்கி மூவர் நடந்து வந்தார்கள். அவர்களின் கைகளில் பளபளவென்று மின்னிக் கொண்டிருக்கும் கைவிலங்குகள்.....

என்னிடம் வந்தவர் என்னை மண்டியிட்டு உட்காரச்சொன்னார்.

பட்டென்று உட்கார்ந்துவிட்டேன்.

இன்னொரு தரம் ''நங்''கென்று குட்டு வாங்க நான் தயாராக இல்லை.

எனது ஒரு கையில் விலங்கை மாட்டினார்,

பக்கத்தில் புத்தகங்கள் அடுக்குவதற்காக நிலத்தோடு புதைக்கப்பட்டிருந்த ஒரு முரட்டு அலுமாரி இருந்தது.

விலங்கின் மறு முனையை அந்த அலுமாரியோடு இணைத்தார்.

தரையிலிருந்து ஒரு அடி உயரத்திலே விலங்கை அலுமாரியோடு பிணைத்தினார், எழுந்து நிற்கவோ, கையைத் தூக்கவோ முடியாமல் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டேன். மற்ற இருவரும் அதே விதமாகத்தரையில் உட்கார்ந்த நிலையில் விலங்கிடப்பட்டு வேறு அலுமாரிகளோடு பிணைக்கப்பட்டார்கள்.

அடுத்த விநாடி, சில பொலிஸ் காரர்கள் பெரிய துப்பாக்கிகளோடு அணிவகுப்பில் நடப்பதைப்போல் நடந்துவந்து எங்கள் அருகில் நின்று கொண்டார்கள்.

அமைச்சர்களின் காரியாலய வாயிலில் காவலர்கள் துப்பாக்கியோடு நிற்பது போல. என் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுத்தை நினைத்து மனம் குமுறியது.

எங்களை அழைத்து வந்தவர்கள் வேகவேகமாக எங்கோ போய் விட்டார்கள்.

''நமக்கு ஏனடா இந்தகதி'' என்பதைப்போல கண்களால் ஒருவரிடம் கேட்டேன்.

இவ்வளவு நேரமும் மனதில் தேக்கிவைத்திருந்த மாபெரும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் வேகத்தில் "நீ, என்னடா செய்தாய்?'' என்று கதறினான்.

நான் பதில் சொல்ல வாயைத் திறப்பதற்கு முன்னமே, அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பொலிஸ்காரர் துப்பாக்கியின் பின் பகுதியால் '' பேசாதேடா '' என்ற சத்தத்தோடு ஒரு இடி இடித்தார்.

அதற்குப் பின் அவன் முதல் முதலாக எப்போது பேசினான் என்பது இப்போதும் எனக்கு நினைவில்லை.

ஒரு மணி நேரம் அப்படியே இருந்திருப்போம்.

இனி நமக்கு விமோசனமே இல்லை என்ற எண்ணம் என் மனதில் பதிய... பதிய தூக்கமோ, மயக்கமோ என்னை நினைவிழக்கச் செய்தது.

ஏதோ சத்தம் கேட்டு கண் விழித்தபோது,

எங்களை அழைத்து வந்தவர்கள் மீண்டும் வந்திருந்தார்கள்,




## காதலிக்குக் கொடுக்கலாமா?

பாரீஸ் நகரில் கல்வி பயின்று கொண்டிருந்த ஜப்பானிய இளைஞன் ஒருவன் பிரஞ்சு நாட்டு அழகியொருத்தியை காதலித்தான். தனது காதலின் சின்னமாக அழகிய செவ்வந்தி பூக்களாலான பூச் செண்டொன்றை பரிசளித்தான். அவளோ பூச் செண்டை கண்டதும் அதிர்ச்சியடைந்து முகம் வாடினாள். அவனை உதாசீனம் செய்து விட்டு போய் விட்டாள்.

ஜப்பானிய இளைஞன் என்ன நடந்ததென்று தெரியாமல் திகைத்தான்! பின்னர் நண்பர்களிடம் விசாரித்து உண்மையை தெரிந்துகொண்டான்.

பிரஞ்சு நாட்டிலே செவ்வந்திப் பூக்கள் மரண வைபவங்களில் மலர் வளையமாக வைக்கப் படுபவை.

ஆனால் ஜப்பான் நாட்டிலோ செவ்வந்தி மலர் தான் தேசிய மலர்! ஒரு காதலிக்கு கொடுப்பதற்கு இதைவிட சிறந்த மலர் இருக்க முடியாது.

மலர்களின் உபயோகம் இனத்துக்கு இனம் வேறுபடுகின்றது. ஏன், இலங்கையில் கூட பௌத்தர்கள் அலரிப் பூவை பூஜை மலர்களாக பாவிக்கின்றார்கள். ஹிந்துக்கள் அதை நினைத்துக்கூட பார்ப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாக அல்ல என்னைப் போல் இன்னுமொரு ''வீரனையும்'' தூக்கிப் போட்டுக்கொண்டு.

எங்கள் விலங்குகள் கழற்றப் பட்டு வரிசையாக நிறுத்தி வைக் கப்பட்டோம்.

எங்களோடு புதிய நண்பரும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அனைவரின் சேட்டுகளும் கழற் றப்பட்டன.

அந்த சேட்டுகளினாலேயே எங் கள் கண்கள் இறுகக் கட்டப்பட் டன.

மீண்டும் விலங்குகள் பூட்டப் பட்டன.

வேறொரு அறைக்கு அழைத் துச் செல்லப்பட்டோம்.

கீழே உட்காரச் சொன்னார் கள்...... உட்கார்ந்து விட்டோம்.

அவர்கள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக்கொண்டார்கள்.

சாப்பிடப் போகிறார்கள் என் பதைப் புரிந்து கொண்டோம்.

அதில் ஒருவன் ''எங்கே அந்த அரை போத்தல்'' எனக் கேட் டான்.

நான் விருந்தாளிக்கு வாங்கிய போத்தல் யாரோ ஒரு பாவிக்கு போய் சேருவதைத் தெரிந்து கொண்டே, சிலையாய் நின்றேன்.

கண்களும் கையும் கழற்றப் படாத நிலையில், மீண்டும் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்... வேனில் ஏற்றப்பட்டோம்.

வேன் சிட்டாய் பறப்பதை உணர்ந்தேன்.

இப்போதுதான் வீட்டு நினை வெல்லாம் வர ஆரம்பித்தது.

பொங்கல் தினம்... விருந்தினர்கள் ......விருந்து சாப்பாடு......இவை யெல்லாம் நினைவுக்கு வர துக்கத் தோடு பசிக்கவும் ஆரம்பித்தது.

தலைவிதியை நினைத்துக் கொண்டே தூங்கிப்போனேன்.

கண் விழித்துப் பார்த்தபோது வேன் நின்றுகொண்டிருந்தது.

வேனுக்கு வெளியே சிலர் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது.

வேன் இலேசாக முன்னும் பின் னும் அசைந்தது.

வேனின் உள்ளே இருந்து ''இன் னும் கொஞ்சம் ... இன்னும் கொஞ்சம்'' என்று றைவர் பக்க மிருந்து சத்தம் கேட்டது.

சில நிமிடங்களின் பின் ஒரு கரகரப்பான குரல் சத்தத்தோடு உத்தரவு போட்டது.

''அவர்களையும் கீழே இறங்கி தள்ளச் சொல்லுங்கள்''

எங்கள் கைகளுக்கும் கண்க ளுக்கும் விடுதலை கிடைத்தது.

கீழே இறக்கப்பட்டோம்.

''வேனை தள்ளுங்கடா..... யாராவது ஓட நினைத்தால்... மண்டை சிதறும்...''

வேன் ''ஸ்டாட்'' இல்லாமல் நின்றுபோய் விட்டிருந்தது.

எல்லோரும் சேர்ந்து தள்ளி னோம்.

தள்ளிக்கொண்டே அந்தப் பகு தியைச் சுற்றி ஒரு தரம் நோட்ட மிட்டேன்.

எனக்குத் தூக்கிவாரிப் போட் டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பேராதனை வரையி லும் கொண்டுவரப்பட்டிருக்கிறோம் என்பதை புரிந்துகொண்டேன்.

வேனுக்கு உயிர் வந்து உறுமி யது.

மீண்டும் வேனில் ஏற்றப்பட் டோம்.

கைகள் விலங்கிடப்பட்டன.

ஊரைத்தான் கண்டுகொண்டு விட்டார்களே, என்று நினைத்தோ என்னவோ கண்கள் மட்டும் கட் டப்படவில்லை.

ஆனல் குனிந்துகொள்ளும்படி சொல்லி தலையில் ஒருவன் பிடித்து அழுத்தினன்.

அப்படியே படுத்துக்கொண் டேன்.

அழுத்திய கைகள் தலையை மெதுவாக தடவிக் கொடுத்தன...

எனக்கு ஆச்சரியமாகவும், இத மாகவும் இருந்தது.

என்மீது அனுதாபப் படுகி ருனே என்று நினைத்தேன்.

இரண்டு தரம் தலையைத் தட விக் கொடுத்தவன், "சொடேர்" என்று தலையில் ஒரு குட்டு விட் டான்.

மண்டையை பிளந்தது போலி ருந்தது.

பல்லைக் கடித்துக்கொண்டேன். நான் அழவில்லை.

ஆனல் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது.

கொஞ்ச நேரத்தில் வேன் நின் றது.

இறங்கியதும் கண்டி பொலிஸ் நிலையம் கண்ணில் பட்டது.

பொலிஸ் நிலைய இரும்புக் கூட் டுக்குள் எங்களைத் தள்ளிப் பூட்டும் போது இரவு இரண்டரை மணி யென்பதை அங்குள்ள சுவர்க்கடி காரம் காட்டியது.

அந்தக் கூட்டுக்குள் இன்னும் பலர் ஏற்கனவே அடைக்கப்பட்டி ருந்தார்கள்.

அவர்களிடமிருந்து பல உண் மைகளைத் தெரிந்துகொண்டேன்.

நான் பயங்கரவாதியாம்.

அதனல் சீ ஐ. டி.யினர் என் னைப் பிடித்து வந்திருக்கின்றார்க ளாம்.

இதைக் கேட்டதும் எல்லாக் கவலைகளையும் மீறிக்கொண்டு சிரிப் புத்தான் வந்தது.

வயிற்றைப் பசித்தது... தாக மாக இருந்தது.

தண்ணீர் கேட்டோம்.

முறைத்தார்கள், பேசாமல் இருந்துவிட்டோம்.

அடுத்த நாள் காலையில் கால் இருத்தல் பாணும் சொஞ்சம் தண் ணீரும் கொடுத்தார்கள்.

இன்னும் என்னென்ன அனுப விக்க வேண்டுமோவென சிந்தித்த படியே அந்த ஒரு நாளையும் போக் கினேன்... அன்று இரவும் கழிந் தது...

அடுத்த நாள் மாலை நாலு மணிக்குத்தான் கதவு திறக்கப்பட் டது.

நானும் என்னேடு வந்த இன் னெரு நண்பனும் அழைக்கப்பட் டோம்.

எங்களிடம் வாக்குமூலம் எடுக் கப்போவதாக தெரிவித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு பெரிய மேசையின் முன்னால் ஒரு வாட்ட சாட்டமான ஆள் அமர்ந்திருந்தார்.

அவர் முன்னால் நான் நிறுத்தப் பட்டேன்.

அவர் என்னை மேலும் கீழும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

பின் கடுமையான குரலில் எச்சரிப்பதைப் போல் பேச ஆரம்பித்தார்.

"நான் கேட்பதற்கெல்லாம் உண்மையைத் தான் சொல்ல வேண்டும். பொய் சொல்ல நினைத்தால் எலும்பு மூட்டுக்களை கழற்றிவிடுவோம்" என்றார்.

நான் அதை ஆமோதிப்பது போல் பேசாமல் இருந்தேன்.

என் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே மேசையைப் பலமாக தட்டியபடி கேட்டார்.

"அந்த மாஸ்டரை கொன்றது யார்?"

அடுத்த விநாடி என் இதயமே பக்கென்று நின்றது.

"எந்த மாஸ்டர்....." தடுமாறினேன்.

கோழியை கொல்லும்போது கூட பக்கத்திலிருந்து பார்க்கத் தைரியமில்லாதவன் நான், என்னிடம் போய் மனித கொலையைப் பற்றியெல்லாம் கேட்கிறாரே என நினைத்துக்கொண்டேன். அதற்குப் பிறகு இன்னும் எதையெதையெல்லாமோ கேட்டார்.

திரும்பவும் நான் வீட்டுக்குப் போய் குடும்பத்தோடு இருக்க முடியும் என்ற நம்பிக்கையே இல்லாமலாகிவிட்டது.

நான் பிறந்தது, வளர்ந்தது படித்தது, பழகியது, அனுபவித்தது அவ்வளவையும் கேட்டார்கள், என் வாழ்க்கைச் சரித்திரத்தையே எழுதப்போகிறவர்கள்போல.

ஒரு மணி நேரம் விசாரிக்கப் பட்டேன்.

அதன் பின் என்னை வேறொரு அறைக்குக் கொண்டுவந்தார்கள்.

அங்கு ஒரு அதிகாரிக்கு முன்னால் நிறுத்தினார்கள்.

அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உன்னை இப்போது விடுதலை செய்கிறோம், மீண்டும் உன்னைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்தால் விசாரணைக்கு அழைப்போம்.... வர வேண்டும்" என்றார்.

நானே மறந்து போயிருந்த என்னைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள் அவ்வளவையும் கேட்டு எழுதிக்கொண்டார்கள்.

"இப்போது மட்டும் என்ன தகவல் கிடைத்து என்னைப் பிடித்தீர்களாம்?"

நான் கேட்கவில்லை; நினைத்துக் கொண்டேன்.

வெளியே வந்தேன்.

சுதந்திரக்காற்று தென்றலாக என்னைத் தழுவிக் கொடுத்தது.

இப்படிப்பட்ட ஒரு அனுபவம் எனக்கு மட்டுமல்ல இனி எவருக்குமே ஏற்படக்கூடாதென்று நினைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாடு சிறப்புற
எங்கள் மனமார்ந்த
வாழ்த்துகள்.

## கண்டியன் டிரேடிங் கோப்பரேசன்

*93, திருக்கோணமலை வீதி,*
*கண்டி,*

*தொலைபேசி: 2 2 6 1 6*

மலையகம் போற்றும்
இ. தொ. கா. வின் சௌமியம்
பெருமை சேர்க்க
வாழ்த்துகிறோம்.

## ஜெமினி ஸ்டோர்ஸ்

*36, திருக்கோணமலை வீதி*
*கண்டி.*

*தொலைபேசி: 2 3 1 3 7*

இ. தொ. கா. மகாநாடு
சீரும், சிறப்புடன் நடைபெற
எங்கள் வாழ்த்துகள்.

## ஏ. சண்முகம்

*88, H. கொட்டுகொடல்ல வீதி,*
*கண்டி.*

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

## ஸ்ரீ லேகா ஜுவலர்ஸ்

*55, யட்டிநுவர வீதி,*
*கண்டி.*

*தொலைபேசி: 3 2 4 3 0*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவுகன் அமிர்தவல்லித் தோட்டத் தொழிலாளி. வயது 45. அவனுடைய மூத்த தாரம் 15 வருட திருமணவாழ்வு நடத்திவிட்டு இறந்துவிட்டாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள். சேவுகன் இரண்டாந்தாரமாக இன்னொரு பெண்ணை மணமுடித்துக் கொண்டான். அவளுக்கும் மூன்று குழந்தைகள். இப்பொழுது சேவுகன் லயக்காம்பிராவில் இரண்டு குடும்பங்கள். மூத்த மனைவியின் பிள்ளைகள்; ஆணும், பெண்ணும் வயது வந்தவர்கள். தோட்டத்திலே வேலைசெய்கிறார்கள். சின்னம்மா வீடுவந்து சேர்ந்த காலத்தில் ஆரம்பித்த கசப்பு படிப்படியாக வலுவடைந்து ஒரு நாள் மூத்த தாரத்தின் பிள்ளைகள் தோட்டத்திலே பூட்டிக்கிடந்த இன்னொரு லயக்காம்பிராவின் பூட்டை உடைத்து குடிபுகுந்தார்கள்.

அடுத்தநாட்காலை சேவுகன் தன் மனைவியோடு வேலைக்குப் போனான். பிரட்டுக் களத்திலே கணக்கப்பிள்ளை அவர்களுக்கு வேலை இல்லையென்று சொல்லிவிட்டார்.

''ஐயா, நாங்க நேரத்தோட தானே வேலைக்கு வந்திருக்கிறோம். ஏன் எங்களுக்கு வேலை இல்லேங்கிறீங்க'' என்று சேவுசன், கணக்கப்பிள்ளையிடம் கேட்டான்.

''நேற்று உன் மூத்த தாரத்து மகன் பலவந்தமாக லயக் காம்பிரா ஒன்றிலே குடிபுகுந்திருக்கிறான். அதனால்தான் உங்கள் இரண்டு பேருக்கும் வேலை இல்லை'' என்று கணக்கப்பிள்ளை விளக்கம் சொன்னார்.




சேவுகன் தொழிற்சங்க மூலமாக நடத்திய பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை. உடனே தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. பதுளையில் இந்தமாதிரி வழக்குகளை வாதிக்கும் திரு. பழனிமுத்து, சேவுகனையும், அவரது குடும்பத்தையும் வரவழைத்து அடுத்தநாள் நடைபெறவிருக்கும் வழக்கு சம்பந்தமாக ஆலோசனை நடத்தினார்.

திரு. பழனிமுத்துவுக்குத் தெரிந்த ஒரு சட்ட ஆலோசகர் இந்த வழக்கை 'தொழில் நீதிமன்றம் விசாரிக்காது' என்று சொல்லி அதற்கான காரணத்தையும் எடுத்துரைத்தார். தொழில் நீதிமன்றம் ஒருவர் வேலைநீக்கஞ் செய்யப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தால் அதை விசாரிக்க அதற்கு நியாயாதிக்கம் இருக்கிறது. இந்த கேஸ் சஸ்பென்சன் கேஸ் — வேலை தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படியான வழக்குகளை தொழில் நீதி மன்றம் விசாரிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றார். திரு. பழனிமுத்து அதையெல்லாம் கேட்டு மெதுவாகச் சிரித்துக்கொண்டார்.

தொழில் நீதிமன்றத்திலே சேவுகன் வழக்கு எடுக்கப்பட்டதும், நிர்வாகத்தின் சார்பில் அதாவது தோட்டத்துரை, கணக்கப்பிள்ளை சார்பில் ஒரு பிரபல வழக்கறிஞர் எழுந்து நின்று சேவுகன் குடும்பத்தினருக்கு வேலை சஸ்பென்ஸ்—தற்காலிக வேலைநிறுத்தம் — பண்ணப்பட்டிருக்கிறதே யொழிய வேலை நீக்கஞ் செய்யப்படவில்லை. அதனாலே இந்த நீதிமன்றம் தொழில் பிணக்குச் சட்டப்படி இந்த வழக்கை விசாரிக்க முடியாது. என்று தனது ஆட்சேபனையைக் கிளப்பினார்.

திரு. பழனிமுத்து, சேவுகன் குடும்பத்தார் வேலை நீக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த நீதிமன்றம் விசாரிக்க அதிகாரம் உண்டு என்று விவாதித்தார்.

நிர்வாகத்தின் சார்பில் தோட்டத்துரையும், கணக்கப்பிள்ளையும் சாட்சியமளித்து இது வேலை இடை நிறுத்தந்தான் என்று கூறினார்கள்.

திரு. பழனிமுத்து கணக்கப்பிள்ளையை குறுக்கு விசாரணை செய்தார்

பிரட்டுக்களத்திலே தான் ‘சேவுகனுக்கும், அவன் மனைவிக்கும் ‘வேலை இல்லை’ என்று சொன்னதை ஒப்புக்கொண்டார். தோட்டத்துரையையும், கணக்கப்பிள்ளையையும் குறுக்கு விசாரணை செய்த பொழுது அவர்கள், சேவுகன் குடும்பத்தாருக்கு வேலை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றி எழுத்து மூலமான தகவல் கொடுக்கவில்லையென்பதையும், தற்காலிக வேலை நிறுத்தத்திற்கான சஸ்பென்சன்—காரணத்தைத் தெரிவிக்கவில்லையென்பதையும் ஒத்துக்கொண்டனர். நீதிமன்றத் தலைவர் — நீதிபதி வழக்கை மேலும் விசாரித்து உடனடியாக சேவுகன் குடும்பத்தாருக்கு நிர்வாகம் மீண்டும் வேலை வழங்கவேண்டுமென்றும், நட்டயீடு செலுத்தவேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

ஒரு சட்டம் எதற்காக ஆக்கப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம் என்ன வென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நிர்வாகம் சட்டத்திலுள்ள குறைபாடுகளை தமக்குச் சாதகமாக பாவிப்பது வழக்கம். பிரபல வழக்கறிஞர்களைக்கொண்டு சட்டம் பேசி கேஸை வென்றுவிடுவார்கள். சட்டத்திலே நாமும் புகுந்துவிளையாட வேண்டும். சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை பிரதிபலிக்கத்தக்கதாக வாதித்தால் அதில் நியாயம் இருப்பதை நீதிமன்றம் ஏற்கும் என்றார் திரு. பழனிமுத்து.

நிர்வாகம் ஒரு தொழிலாளியை நீண்டகாலம் தற்காலிகவேலை நிறுத்தம் செய்யமுடியாது. அத்தகைய நடவடிக்கை வேலைநீக்கம் என்றே கொள்ளப்படும். அவ்விதமான சந்தர்ப்பங்களில் தொழிலாளி தொழில் நீதிமன்றத்திற்குப் போகமுடியும்.

— பிரேம்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைமரத்தின் சபதம்

என்றேனும் ஒரு நாள்
இந்த பூமியிலிருந்து
பறந்து போய்விடுவேன்
என்று
எவரேனும் எதிர்பார்த்தால்
அவர்கள்
ஏமாந்து போவார்கள்.

நான் மண்ணில் வேரோடி
மாநிலத்தில் கால்பதித்து
வீசும் புயற்காற்றை
விழும் வரைக்கும் நின்றெதிர்ப்பேன்!

நின்றெதிர்த்த முடிவினில் நான்
நிலத்தில் விழுந்துவிட்டால் — என்
கன்றெதிர்க்கும்! கன்றுடைய
கன்றெதிர்க்கும்! கன்றுகளின்
கன்றெதிர்க்கும்!

நான் வெட்ட வெட்டத்
துளிர்ப்பேன்: தழைப்பேன்;
இறப்பின் மடியினில்
கண்கள் விழிப்பேன்!
என்
ஒவ்வொரு இறப்பும்
ஒவ்வொரு பிறப்பு
ஒவ்வொரு பிறப்பும்
தனித்தனிச் சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எவராவது பிழைத்ததுண்டா?

(1) உலகெங்கும் 1973ஆம் ஆண்டு 500,000 பேர் நச்சுத்தன்மையுடன் கூடிய விபத்துக்களுக்கு ஆளாகியுள்ளனர். இவற்றுள் 50,000 பேர்வரை இறந்துள்ளனர்.

இலங்கையில் 1975 அளவில் சராசரியாக 13,000 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 1000 பேர் வருடாவருடம் இறந்துள்ளனர்.

(ஜெயரட்னம் — 1982)

(2) இந்தியாவிலுள்ள 4000 இரசாயனத் தொழிற்சாலைகளில் 1980ஆம் ஆண்டில் மட்டும் 10,000 தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாயினர். 100 பேர் கொல்லப்பட்டனர்.

(எஸ். இ. 1984 — 1985)

(3) பிரான்சில் 11 நிமிஷத்துக்கு ஒரு தொழிலாளி தொழிற்சாலையில் விபத்துக்குள்ளாகி உயிரிழக்கிறான்,

(ஐ. எல். ஓ.)

(4) அமெரிக்காவில் ஆண்டுதோறும் சராசரியாக 800 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழக்கின்றனர்.

(ஐ. எல், ஓ.)

(5) 1984ஆம் ஆண்டு இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள போபால் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரசாயனத் தொழிற்சாலையில் நிகழ்ந்த விபத்தினால் 2500 பேர் மரணமாகினர்;

இவ்வளவு பெருந் தொகையான மனித உயிர்களை பலிகொண்டதுடன், இந்த விபத்தின் தாக்கம் நின்றுவிடவில்லை. இன்றுவரை அதன் அனர்த்தங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன இந்த விபத்தின் பேரழிவை பற்றி இன்னும்கூட பூரணமாக தெரிந்துகொள்ள முடியவில்லை.

(6) கடந்த 40 ஆண்டுகளில் உலகெங்கிலும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 40,000 இரசாயனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது, பாவனையில் உள்ள 30% இரசாயனப் பொருட்களின் நச்சுத்தன்மை பற்றி நமக்கு ஏதும் தெரியாது.

(என். இ. 1984 — .,)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
மகாநாடு கண்டி மாநகரில் சிறப்புற
எங்கள்
மனமார்ந்த வாழ்த்துகள் !

# சிலோன் பெயின்ட் இண்டஸ்றீஸ்

கிரெளன் கிளாஸ்ஸோவுக்கு பெயர் பெற்றது
6, றீஜன்ட் பில்டிங், கொழும்பு-2.

இ. தொ. கா. மகாநாடு
இன்று போல் என்றும் சிறப்புற
எங்கள் வாழ்த்துகள்

## ஸ்ரீ ஹரன் ஹார்ட்வெயார்

இரும்புப் பொருட்கள்,
வர்ணங்கள், அரிசி ஆலை
உதிரிப்பாகங்கள்,
தண்ணீர் பம்புகள்
விற்பனையாளர்.

182, சர். பெனட் சொய்சா வீதி,
கண்டி.

தொ. பேசி. 23750

இ. தொ. கா. மகாநாடு
சிறப்படையவும்
சௌமியம் வளரவும்,
எங்கள் நல்வாழ்த்துகள்.

## எம். எஸ். கண்டி ஒயில்

176, கொழும்பு வீதி,
கண்டி.

தொலைபேசி : 08-4235




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தொ. கா. மகாநாடும்,
சௌமியமும் சிறக்க
வாழ்த்துகிறோம்.

**ரீகல் ஹாட்வெயார்ஸ்**
*40, கொழும்பு வீதி,*
கண்டி.

தொலைபேசி: *22815*

இ. தொ. கா. மகாநாடு
வெற்றியீட்ட எங்கள்
வாழ்த்துகள்.

**சென்ரல் ஏஜன்சீஸ்**
**(பிரைவேட்) லிமிடெட்.**
*91,* கொட்டுகொடல்ல வீதி,
கண்டி.

இ. தொ. கா. மகாநாடு
மிகச் சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்.

**கொமர்சியல்**
**ஹாட்வெயார்ஸ்,**
*65, 66,* கொழும்பு வீதி.
கண்டி.

தொலைபேசி: *23988, 23565*

இ. தொ. கா. மகாநாடு
பெரும் சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்.

**பீபிள்ஸ் ஹாட்வெயார்ஸ்**
திருக்டர் உதிரிப்பாகங்கள்
திருக்கோணமலை வீதி,
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக அபிவிருத்தி துறையில் பெண்கள்

தோட்ட வாழ்க்கையை சிறிது பின்னோக்கிப் பார்த்தால் ஒவ்வொரு தோட்டமும் ஒவ்வொரு தனி உலகமாகவே இருந்தது. குட்டி சமஸ்தானங்களாகவே அவை விளங்கின.

தோட்டத்தின் நிர்வாகமே ஒரு தனிப்போக்கு. அங்கு சிப்பந்திகளும் சரி தொழிலாளர்களும் சரி அந்தப் போக்கின் பிரதிபிம்பங்கள் வெளி உலகத் தொடர்பே இல்லை. குடிதண்ணீர், வைத்தியம் அனைத்தும் நிர்வாகத்தினுள் அடக்கம். இதனால் அந்த வாழ்க்கை, தோட்டத்தை நம்பி வாழும் நிலையிலிருந்தது.

காலம் காலமாக கிட்டத்தட்ட நூருண்டு இயந்திர வாழ்க்கை. இராணுவப் பாசறையைப்போன்ற இயக்கம்.

பிரட்டுக்களம் போதல் அடுத்தவன் ஆணையில் செயல்படும் தனித்துவம் இழந்த நிலை. உழைப்பதும், உழைப்பிற்கு உடலை வளர்க்க உண்ணுவதும் தோட்ட மக்களின் சேவை. பெற்ற பிள்ளைகளை தங்கள் ஊதியத்தைப் பெருக்க பயன்படுத்தப்பட்டனர். கடன் பளு காரணமாக கொந்தருப்பை எடுத்தல். இந்த நிலையில் வேறு சிந்தனைக்கு இடமில்லாதிருந்தபொழுது தான் சமுக அபிவிருத்தித் திட்டம் தோட்டங்களில் புகுத்தப்பட்டது.

தன்னைச் சுற்றியுள்ள வெளியுலகத்தின் முன்னேற்றம், நாகரிக வளர்ச்சி, சிந்தனையில் மாற்றம் எவ்விதத்திலும் தாக்கம் ஏற்படாத நிலையில் படித்த சில பெண்கள் சமுக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தித் திட்டத்தை தோட்டங்களில் செயல்படத் தொடங்கினார்கள். இந்த சூழ்நிலையில் தோட்டங்களில் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்துவதே முக்கியமென்பதை சமுக அபிவிருத்தித் திட்டம் கருத்திற்கொண்டு செயல்பட்டது.

தன்னைச் சுற்றி அசுத்தம் தலைவிரித்தாடுவதைப்பற்றித் தானும் சிந்திக்க முடியாத நிலையில் இயங்கிய தோட்டப் பெண்களிடையே கடந்த பத்து ஆண்டுகளாக சமுக அபிவிருத்தித் திட்டப் பெண்கள் பெருமாற்றங்களைச் செய்திருக்கிறார்கள்.

குனிந்த தலை நிமிராமல் இருப்பதே பெண்ணுக்கு அழகு, என்று பெண்களை பதுமைகளாக்கிய மூட நம்பிக்கைகளை அறுத்தெறிந்துவிட்டு இன்று ''நிமிர்ந்த நடையும்...... நேர்கொண்ட பார்வையும்'' என்று மகாகவி பாரதி குறிப்பிட்ட இலட்சியப் பெண்ணாக, கட்டைக் கால் சட்டையோடு வலைப் பந்தாட்டமாடும் புதுமைப் பெண்களை மலையகத்தில் காண்கிறோம். விளையாட்டுத் துறையிலோ மலையக இளந்தலைமுறையினர் வரலாறு படைத்து வருகிறார்கள்,

தொழிலுக்குப் போய்வந்த மிகுதிநேரத்தில் மரக்கறித் தோட்டம், மீன் வளர்ப்பு, சிறு கைத்தொழில் என்று அவர்களின் உபவருமானத்திற்கு பல வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றோம். பல தோட்டங்களில் நூற்றுக்கணக்கான தையல் மெசின்களை வாங்கிக் கொடுத்திருக்கின்றோம். ''வெலிஓயா'' என்ற தோட்டத்தில் பெண்கள் அழகிய ஆடைகளைத் தைத்து கடைகளுக்கு விற்பனை செய்யுமளவுக்கு வளர்த்தெடுத்திருக்கின்றோம்.

சிறந்த கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தி மக்களுக்கு அறிமுகப்படுத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துகின்றோம். இதன்மூலம் மறைந்து வரும் கலைகளுக்கு புத்துயிர் கொடுக்கவும், வளர்ந்து வரும் புதுப்புது கலைகளையெல்லாம் மக்கள் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றோம்.

இன்னும் நாங்கள் வெற்றி பெறாத சில விசயங்களும் இருக்கத்தான் செய்கின்றன. திட்டமிட்ட சீரான வாழ்வும், சேமிப்புப் பழக்கமும் இவர்களை இன்னும் ஆகர்ஷிக்கவில்லை. மதுப்பழக்கத்தையும் மறக்க மறுக்கிறார்கள். ஆனால் இவைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை கூடிய விரைவில் ஏற்படுத்தி விடமுடியுமென நம்புகின்றோம்.

இவைகளையெல்லாம் செய்துவிட்டால் மட்டும் சமுதாயம் அபிவிருத்தியடைந்துவிடும் என நாங்கள் கூறவரவில்லை. ஏனென்றால் இவை மட்டும் சமூகத்தின் தலைகீழான மாற்றத்திற்கு காரணமாகிவிடாது.

''தோட்ட நிர்வாக அமைப்பு'' என்ற சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்கின்ற இந்த சமூகத்திற்கு அதை உடைத்தெறிந்து கொண்டு வெளியே வர வேண்டுமென்ற தெளிவை ஏற்படுத்துவதையே தற்போதைய அவசர கடமையாக கருதுகின்றோம். அதற்கான அத்திவாரம் போடப்பட்டுள்ளது என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு.

நாமும் நாகரிகமாக வாழ வேண்டும். நமது பிள்ளைகள் படித்தவர்களாக இருக்க வேண்டும்! பொருளாதாரத்திலே நமது நிலை மாறியாக வேண்டும். என்றெல்லாம் உறுதியாக இம்மக்கள் எண்ண ஆரம்பித்துவிட்டால், அந்த இலட்சியத்திற்காக வாழ வேண்டுமென்ற வேகம் இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் அதுவே எமது நோக்கமும்...வெற்றியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு இலங்கைக்குமே நாங்க தாங்க இரும்புச்சத்தைக் கொடுக்கிறோம்'' — என்று கூறிய பொன்னம்மாவை வியந்து நோக்குகிறோம். உழைத்து ஓடாகிப்போவதில் பெயர் போன இந்தியவம்சாவழி மக்கள் கொழும்புக்குள்ளும், கொழும்பைச் சுற்றியும் ஒரு குட்டி பசுமைப்புரட்சியையே ஏற்படுத்தி வந்துள்ளார்கள். ஒன்றுக்கும் உதவாது என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட சதுப்பு நிலங்கள் இன்று பச்சைப்பசேலென்று கீரைத் தோட்டங்களாக மிளிர்ந்துள்ள காட்சியை நாம் களனி, ஜாஎல, மாபொல, வத்தளை ஆகிய இடங்களில் காணலாம். அதிகம் விளம்பரமின்றி பத்திரிகையாளர்களின் கவனத்தைக் கவராது அமைதியாக ஒரு முக்கிய விவசாய பணியில் எமது மக்கள் ஆயிரக்கணக்கில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் இன்றும் கூட மலையகத் தோட்டப் பகுதிகளில் ஒரு தொடர்பை வைக்காமல் இல்லை.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் மட்டுமின்றி வெளியூர்களுக்கும் ',இரும்புச் சத்து'' இங்கிருந்து தான் போகிறது. யாழ்ப்பாணம் உள்பட இலங்கையில் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்றுமதியாகும் இந்தக் கீரைக்கு ஊர்களுக்கேற்ற வெவ்வேறு வெட்டுகள் உண்டு. ',கண்டி வெட்டு'' என்ற பெயரில் வெட்டப்படும் தண்டுகள் நீண்டுள்ள கீரையைக் கண்டி முதலாளிகள் வாங்குகிறார்கள். இதே போன்று தண்டுகளிலும். தளிர்களிலும் சில சில வித்தியாசங்களோடு ''கொழும்பு வெட்டு'', ''திருகோணமலை வெட்டு'' என்றெல்லாம் கூட உண்டு. கண்டி வெட்டு கொழும்பு வாசிகளுக்கு ஒத்துவருவதில்லையாம். இத்தொழிலில் ஈடுபடுபவர்களில் வயது முதிர்ந்தவர்கள் கூட கடும் உழைப்பாளிகளாகவே இருக்கிறார்கள். தாங்கள் சுகதேகிகளாக இருப்பதற்கு அதிகம் கீரை உண்ணுவது தான் காரணம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இங்கு நாம் பயன்படுத்தும் எல்லாவிதமான கீரைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொன்னங்கணி, சிறுகீரை, பருப்புக்கீரை, அகத்திக்கீரை. பசளிக்கீரை, முருங்கைக்கீரை, கங்குங்கீரை, அரைக்கீரை போன்ற எல்லாவிதமான கீரை வகைகளும் உற்பத்தியாகும் தனி உலகம் இது. என்னென்ன கீரையில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதை நமக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள். எதை எப்படி சமைக்கவேண்டுமென்பதில் கூட கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

சிலர் கீரைத் தோட்டச் சொந்தக்காரர்களாகவும் உள்ளனர். மற்றவர்கள் அத்தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்பவர்கள். இத்தொழில்களில் பெண்களே அதிகமாக ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் கணவர்களிடமிருந்து எதுவித வருமானத்தையும் எதிர்பார்க்காது இக்கீரைத் தோட்டங்களையே நம்பி வாழ்கிறார்கள். சுயமாக குடும்பத்தை நடத்தும், கணவன்களுக்கும் சோறு போடும் புதுமைப்பெண்கள் இவர்கள்.

மலையகத் தோட்டங்களில் வேலைசெய்தவர்கள் இங்கு சுயமாக, சுதந்திரமாக உழைக்கிறார்கள். தோட்ட நிர்வாகத்தை நம்பி வாழ்ந்தது போல் அல்லாமல் இவர்களே குத்தகைக்கு நிலங்களை வாங்குகிறார்கள் .... பயிரிடுகிறார்கள். .... அறுவடை செய்கிறார்கள்.....வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள்.... பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்.. தங்கள் தேவைகளைத் தாங்களே தன்னம்பிக்கையுடன் கவனித்துக் கொள்கிறார்கள். ஒரு வேலிக்குள் அடைப்பட்டுக் கிடப்பதுபோலில்லாமல், வெளியுலகின் சுதந்திரக் காற்றை அனுபவித்து சுவைக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையக வாழ்க்கையுடன் ஒன்றி விட்ட துன்பங்களும் பிரச்சினைகளும் இங்கும் தொடராமல் இல்லை. சுகாதார வசதிகள் குறைவு என்று சேரி வாழ்க்கையின் பிரச்சினைகள் இங்கும் தலைகாட்டுகின்றன. பல தலைமுறைகளாக வாழ்ந்து வருபவர்களுக்கு சில சமயங்களில் குடியிருப்பு உரிமை மறுக்கப்படுகின்றது. திடீரென்று வீடுகளிலிருந்து விரட்டப்படுவதுமுண்டு. ஆனால், தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற சிந்தனை தற்போது இவர்கள் மத்தியில் வேரூன்றி வருகின்றது. இதற்காக இவர்கள் செயலிலும் இறங்கியுள்ளார்கள்.

இவ்விநோத உலகத்தைத் தரிசிக்க எங்களுக்கு உதவியாக இ. தொ. கா. மாதர் அணியின் இணைப்பு அதிகாரியான திருமதி தவமணிதேவி விசுவநாதன் உடன் வந்து உதவினார். இவர்களோடு மனம்விட்டுப் பேசும்போது ஆச்சரியமான - சுவாரஸ்யமான பல தகவல்கள் எமக்குத் தெரியவந்தன. அவர்களின் உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் கண்டு வியந்தோம்.

அவர்களின் உபசரிப்பும், அன்னியோன்யமும் எங்களைச் சிலிர்க்க வைத்தது. இன்னும் நிறைய நேரம் நாங்கள் அவர்களோடு கலந்துரையாட விரும்பியபோது, ஒரு பெண்மணி ஐயா, “நாங்கள் கொட்டகலையில் இ. தொ. கா. நடத்துகின்ற கருத்தரங்குக்குப் போக தயாராக இருக்கிறோம்; வேறொரு தினத்தில் வரமுடியாதா?” என்று மன்னிப்புக் கேட்கும் தோரணையில் கேட்டார்.

“அவர்கள் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையோடு நடக்க வாரம்பித்திருக்கிறார்கள்” என்ற திருப்தி எங்கள் நெஞ்சை நிறைக்க அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஐ. சர்வதேச வீடமைப்பு ஆண்டு என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது. நமது பிரதமரின் ஆலோசனையே இப்பிரகடனத்திற்குக் காரணமென்பது பெருமைதரும் விஷயம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்த வீடு. இது பிரகடனத்தின் உன்னத லட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு திட்டங்கள் பல இப்போது தீட்டப்படுகின்றன.

தாங்கள் வாழும் குடியிருப்புகளை தங்களுக்கே சொந்தமாக்க வேண்டுமென்பது தோட்டத் தொழிலாளரின் நீண்டகால கோரிக்கை. ஜனாதிபதியால் இது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சர்வதேச வீடமைப்பு ஆண்டு இறுதிக்குள் கொள்கை நடைமுறையாக வேண்டும். இதனை சாத்தியமாக்குவதே இன்றைய தலையாய கடமையெனத் தலைவர் தொண்டமான் தெளிவுபடுத்தியிருக்கிறார்.



குடியிருப்புகளை உடமையாக்கும் அதே வேளையில் வீடமைப்பில் துரித முன்னேற்றம் ஓர் அடிப்படை தேவையாகும். நூறாண்டு காலமாக லயக்காம்பிராக்கள் என்ற பெயரில் தோட்டங்கள் தோறும் நிலைபெற்றுள்ள அழுக்கு நிறைந்த சேரிகள் நாட்டுக்கே அவமானம்.

10 - 12 அடி காம்பிரா, ஒரு சிறிய விறாந்தை. இதில் கணவன், மனைவி, வயதுவராத 3 பிள்ளைகள் மட்டுமே வாழலாமென சட்டம் சொல்கிறது. சட்டம் சரியா என்பது ஒரு கேள்வி. இச்சட்டம் எங்காவது அமுலிலிருக்கிறதா? என்பது மற்றுமொரு கேள்வி.



# நாமிருக்கும் வீடு நமது என்றால் ... ம் நமதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குஞ்சு வளர்ந்தவுடன் கூட்டை விட்டுப் பறந்துசென்று புதுக்கூடு அமைத்துக்கொள்கிறது.

ஆனால் தோட்ட லயத்தில் ஒரு தொழிலாளி, மனைவி, தேனிலவு காணத்துடிக்கும் திருமணமான மகன், இதர பிள்ளைகள், இருமிக் கொண்டிருக்கும் பாட்டி இவர்க ளெல்லாம் ஒரே அறையில் அடக்கம்.

வீடு என்பது நான்கு சுவர்களுக் குள் அடங்கியதல்ல. சுற்றுச் சூழல், சிறு குழந்தைகள் விளையாட களம் இவையெல்லாம் கொண்டதே. வீடு.

நோய் நொடியின்றி வாழ கழிவுப் பொருட்களை அகற்றல் அத் தியாவசியம் ஆனால் தோட்டங்கள் கள் பலவற்றிலோ கழிவு நீரின் தேக் கம், சாக்கடையின் நாற்றம்.

குடிப்பதற்கு சுத்தமான நீர், சுகாதார வசதிகள், ஒன்றுகூடி உளந்திறந்து பேச ஒரு பொதுவான இடம், அருகில் விளையாட்டு மைதானம் இவையெல்லாம் இருந் தால்தான் வீடு என்பதற்கு அர்த்த முண்டு.

உலகவங்கி திட்டத்தின் கீழ் ஒரு சில புது குடியிருப்புகளே உருவாக் கப்படும். திட்டத்தில் இதற்கென ஒதுக்கியிருக்கும் பணதில் நூற்றுக்கு ..கினைந்து சத வீத, புதுக்குடி யிருப்புகளையே ஏற்படுத்தமுடியும்.

எஞ்சியுள்ள 85 சத விகித குடி யிரு'புகளை முற்றாக புனரமைக்க வேண்டியது அரசின் கடமை.

இதனை யதார்த்தமாக்குவதற்கு இடைவிடாது முயற்சிசெய்வது நமது கடமை.

"சௌமியம்

இன்றே

சந்தாதாரராகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாடு சிறப்புற
எங்கள் வாழ்த்துகள்

★

சாரதா டெக்ஸ்டைல்ஸ்

64, கொழும்பு வீதி,
கண்டி.

தொ. பே,: 23007



இ. தொ. கா. மகாநாடு
சிறக்க வேண்டுமென
வாழ்த்துகிறோம்.

★

ஸ்ரீ முருகன்ஸ்

புடவை விற்பனையாளர்
94, கொழும்பு வீதி,
கண்டி,

தொலை பேசி: 23399



இ. தொ. கா. மகாநாடு
வெற்றியடைய
எங்கள் வாழ்த்துகள்.

★

மார்க்கட்
மெடிகல் ஸ்டோர்ஸ்
200, முதல் மாடி,
மத்திய சந்தை
கண்டி

தொலை பேசி: 22691



இ, தொ. கா. மகாநாடு
சிறப்புப்பெற எங்கள்
வாழ்த்துகள்.

★

சிலோன் எருப்மன்
ஜெனரல் டிரேடிங் கம்பெனி

54, சர். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த.
கொழும்பு-2.
தொலைபேசி: 20152




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இன் 'லலிதா'
தரமான நகைகளுக்கு
விஜயம் செய்க

இ. தொ. கா. மகாநாடு
வெற்றி பெற
எங்கள் நல்வாழ்த்துகள்

★

ஜனதா என்டர் பிரைஸஸ்

170, கொழும்பு வீதி.
கண்டி.

தொலைபேசி: 32298

இ. தொ. கா. மகாநாடும்
சௌமியமும் பெரும் சிறப்புப்பெற
எங்கள் வாழ்த்துகள்.

★

எஸ். பி. கே.
சுப்பையாபிள்ளை & பிரதர்ஸ்

நவநாகரிக, தரமான புடவைகள்
(மொத்த, சில்லறை வியாபாரம்)
28, டி. எஸ். சேனநாயக்க வீதி.

சௌமியம் அறிவொளி வீச
எங்கள் வாழ்த்துகள்

★

சரஸ்வதி ஸ்டோர்ஸ்

98, கொழும்பு வீதி,
கண்டி.

தொலைபேசி: 22104

இ. தொ. கா. மகாநாட்டிற்கும்

★

சௌமியம் இதழுக்கும்
எங்கள் இனிய
வாழ்த்துகள்!

எஸ். வைத்திலிங்கம்

14/3, தெம்பிலிகொஹூவ,
வத்துகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றப் பாதையில் பெண்கள்

இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றது. இவர்களில் பெண்களின் நிலை மிக மோசமாகும். இவர்களுடைய முன்னேற்றத்துக்காக இ. தொ. கா. அரும்பணியாற்றி வருகிறது. பல திட்டங்களை வகுத்து தனது மாதர் அணிப் பகுதிமூலம் செயற்படுத்துகின்றது. இ. தொ. கா.வின் மாதர் அணியினர் புகுந்து வந்த தோட்டங்களிலெல்லாம் பெண்ழவிடையே புதிய மாற்றம்

* பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்களில் 53 சத விகிதமானவர்கள் பெண்கள்.
* ஆண்களுடன் சமமான உடலுழைப்பு, வீட்டுச் சுமை, குடும்பச் சுமை, குழந்தைகளைப் பராமரித்தல் இதனால் பெண்களுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை.
* ''ஆணுக்குப் பெண் சரிநிகர்' என்பது பாரதியின் கவிதை ஆனால் தோட்டங்களிலோ இது கட்டுக் கதை.

தென்படத் தொடங்கி உள்ளது.

இங்கு தோட்டப் பெண்களுடன் பெண்களாக நின்று சேவைபுரியும் இ. தொ. கா. மாதர் அணியினர் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர்.

திருமதி கிறிஸ்டீன் அந்தனி பலகாலமாக இ. தொ. கா. மாதர் அணியின் உத்தியோகஸ்தராகக் கடமைபுரிகின்றார்.

இவர், இன்றைய மலையகப் பெண்கள் பற்றிக் குறிப்பிடுகையில் ''இன்று மலையகப் பெண்கள் எவ்வளவோ மாறிக்கொண்டு வருகின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றனர். இவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது. மற்றப் பெண்களைப்போல் தாமும் முன்னேற வேண்டுமென்ற புது வேகம் நிறையவே காணப்படுகின்றது. இவைகளைப் பார்க்கும் பொழுது எங்களுக்கும் உற்சாகமாக இருப்பதுடன், சலிப்பு, களைப்புத் தெரியாமல் வேலை செய்யவும் முடிகின்றது'' எனக் குறிப்பிட்டார்.

கேள்வி: மலையகப் பெண்கள் கல்வியில் மோசமான நிலையிலிருக்கின்றனர். இந்நிலையில் வேலை செய்வது கஷ்டமாகத் தெரியவில்லையா?

''மலையகப் பெண்களில் பலருக்கு எழுத வாசிக்கத் தெரியாது என்பது உண்மைதான். ஆனால், எல்லோரையும் ஒன்றும் தெரியாதவர்கள் என்று கூறுவதற்கில்லை. சிலர் பணக்கணக்கில் கெட்டிக்காரர்கள். மாதமுழுவதும் தாங்கள் எடுத்த கொழுந்தை கணக்கு வைத்து செலவு போக தமது சம்பளப் பாக்கியைச் சரியாகக் கணிக்கக்கூடியவர்களும் இருக்கின்றனர். ஆனால். இப்படியானவர்கள் மிக மிகக் குறைவு. இதனை நிவர்த்தி செய்ய இன்று நாங்கள் இரவுப் பாடசாலைகளை ஆரம்பித்துள்ளோம். பலர் தாமாகவே முன்வந்து கற்கத் தொடங்கியுள்ளனர். ஆரம்பத்தில் கொழுந்து கணக்கைச் சரிபார்க்க படிக்க வேண்டுமென வந்தவர்கள் இன்று நாட்டு நடப்பைப்பற்றி அறிய வேண்டுமென்று ஆர்வம் காட்டுகின்றனர்.

கேள்வி: தோட்டத் தொழிலாளர்கள் கடும் உழைப்பாளிகள். பலர் வேலை முடிந்தவுடன் குடிக்கின்றனர். இதுபற்றி.....

''குடி குடியைக் கெடுக்கும் என்பார்கள். தோட்டப்புறங்களைப் பொறுத்து இது பெரும் பிரச்சினையாகத்தானிருக்கின்றன. குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பின்போது இதுபற்றி எடுத்துக் கூறி வருகின்றோம். 'சிம்பிலாக' ஒரு கணக்குத்தான். அவர்களே அசந்துவிடுகிறார்கள். அதாவது ஒருவர் ஒரு நாளைக்கு கால் போத்தல் போடுகின்றார். அது அது 15/- ரூபாவாகும். ஒரு மாதத்துக்கு 450/- ரூபாவாகும். ஒரு வருடத்துக்கு 5400/- ரூபா வாகின்றது. இதனைப் பத்து வருடத்துக்கு கணக்குப் பார்த்தால் 54,000/- ரூபாவாகின்றது. இவ்வளவா செலவழிக்கின்றோம் என்று தலையில் கைவைக்கின்றனர்.

கேள்வி: இதனால் நன்மையேற்பட்டுள்ளதா?

''ஏற்படாமல் என்ன? இதனைச் சொல்லி இ.தொ.கா.வின் சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றோம். ஒவ்வொரு தோட்டத்திலிருந்து 25 பேரை இதற்காகத் தெரிவு செய்துள்ளோம்.

கேள்வி: ஆண்கள் பெண்களை அடிப்பது பற்றி . . ''

அவர் சிரித்துவிட்டு, ''உண்மைதான். சர்வ சாதாரணமாகக் காணக்கூடிய நிகழ்ச்சி இது. இருந்தும் இன்றைய இளந் தலைமுறையினர் மத்தியில் இது குறைந்து வருகிறது.

காதல் திருமணங்கள் பற்றி வினவியபோது, ''நிறையவே காதல் திருமணங்கள் நடைபெறுகின்றன. இருவரும் உழைப்பதினால் இலகுவில் இணையக்கூடியதாக இருக்கின்றது'' எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து சாதிகள் பற்றி வினவியபோது, ''சாதிகள் இருக்கின்றன. ஆனால் கட்டுப்பாடுகள் தளர்ந்துவிட்டன.'' என்றார்.

இவரைப்போல செல்வி சரஸ்வதி சுப்பையா, திருமதி தவமணிதேவி விசுவநாதன், இருவரும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

செல்வி சரஸ்வதி சுப்பையா இவர்களில் இளையவர். மேடைப் பேச்சாளருமாவார். மாதர் மகாநாடுகளை ஒழுங்குபடுத்தியும், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தும், இன்னும் பல்வேறு வகையான சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

திருமதி தவமணிதேவி விசுவநாதன் கொழும்பு, மத்துகமப் பகுதிகளில் பணியாற்றுகிறார். தோட்டப் பகுதி மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, கொழும்பு, இரைத்தோட்டம் போன்றவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் மத்தியிலும் சென்று சேவை செய்கின்றார்.

இதன் இயக்குநர் திருமதி ஜெயமலர்தேவி ஜெயராஜ். இவர் பல்வேறு திட்டங்களை மாதர் அணிப் பகுதியில் அறிமுகப்படுத்தி உள்ளார். அண்மையில் 24 பெண்களுக்குப் பயிற்சியளித்து தோட்டப்பகுதிகளின் பல்வேறு இடங்களுக்கு சமூகப் பணிபுரிய அனுப்பியுள்ளார்.

வளர்க இவர் தம் பணி.

**அட்டையில்**

தலவாக்கலையில் கல்வி கற்கும் பெரிய மல்லியப்பூ தோட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ். சகுந்தலாவும் அவருடைய சிறிய தாயாரான திருமதி எஸ். சிவபாக்கியமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தொ. கா. மகாநாடு
சிறப்புடன் நடைபெற
வேண்டுமென வாழ்த்துகிறோம்!

அசோகா டெக்ஸ்டைல்
68, கொழும்பு வீதி,
கண்டி
தொலைபேசி: 22597

இ. தொ. கா. வின்
சௌமியம் சிறப்புப் பெற
நல் வாழ்த்துகள்!

எஸ்டேட் சப்ளைஸ்
கோர்ப்பரேசன் லிமிட்
49, கொழும்பு வீதி,
கண்டி.
தொலைபேசி: 22448

இலங்கை தொழிலாளர்
காங்கிரஸ்
நடத்தும் சௌமியம் வளர
எம் வாழ்த்துகள்!

ரகுலன்ஸ்
புடவை
இறக்குமதியாளர்களும்
வியாபாரிகளும்
87, கொழும்பு வீதி,
கண்டி.
தொலைபேசி: 24290

மலையகத்திலே சௌமியம்
அறிவொளி பரப்ப
எங்கள் வாழ்த்துகள்

கருணைநிதி அன் கம்பனி
122, கொழும்பு வீதி,
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 வது காங்கிரஸ் மகாநாடு

இன்னும் நான்காண்டுகளில் கொண்டாடப்படவிருக்கும் பொன்விழாவுக்கு 29 ஆவது மகாநாடு முக்கிய விழாவாக அமைந்துள்ளது.

சோதனைகள் சூழ்ந்த சமயங்களில் சமுகங்களிற் சில சிதறுண்டு போனதையும், சில சமுகங்கள் அச் சோதனைகளையே தம் சாதனைகள் மூலம் வெளிப்பட்டு முன்னேறியதையும் வரலாறு பகர்கின்றது. சோதனை மிகுந்த காலங்களில் சில சமுகங்கள் சோர்வடைந்து நிலை எதிர்தடுமாறுவதுண்டு. மற்றும் சில சமுகங்கள் எத்தகைய சோதனைகளையும் கொண்டு வெற்றி கண்டு முன்னேறுவதுண்டு. தாங்கள் இதிலே இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதில் மலையகச் சமுதாயம் பெருமிதமடைய முடியும்.

காங்கிரஸ் எனும் சக்திவாய்ந்த கோட்டையைக்கட்டி யெழுப்பி சாதனை புரிந்துவிட்டார்கள் அவர்கள். இச்சாதனைக்கு முதுகெலும்பாக விளங்கிய தோட்டத் தொழிலாளர்களுக்கு எம் சிரம் சாய்ப்போம்.

மலையக மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் சின்னமாக, நம்பிக்கை நட்சத்திரமாக இ. தொ. கா திகழ்கிறது. காங்கிரசின் தன்னிகரில்லாத் தலைவராக பிரகாசிக்கிறார் தலைவர் தொண்டமான்.

இருபத் தெட்டாவது காங்கிரஸ் மாகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரையில் பேராளர்களுக்கு விடுத்த வேண்டுகோள் இது தான். "நீங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தில் உறுதியாக இருங்கள். உங்கள் உரிமைகளையும், சுதந்திரங்களையும் விட்டுக்கொடுக்காதீர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனும் இத்தாபனத்தைக் கட்டி யெழுப்புங்கள். அதில் தான் உங்கள் முழு பலமும் தங்கியிருக்கிறது"

இன்று முன்னெப்பொழுது மில்லாத முறையில், 50 ஆண்டு நெருங்கும் இந்நேரம், அதன் சரித்திரத்தில் முன்னெப் பொழுதும் இல்லாத வகையில் அதி சக்திபடைத்து விளங்குகின்றது காங்கிரஸ்.

மலையகத்தில் கல்வித்துறையில் ஒரு மௌனப் புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கற்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகின்றது. மலையக மக்களின் சரித்திரத்தில் ஒரு புதிய யுகம் உருவாகின்றது.

சௌமியத்தின் தோற்றம் இந்த எழுச்சியின் பிரதிபலிப்பாகும்.

மகாநாடு சிறக்க சௌமியம் மனமுவந்து வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவிளக்கு



பாலிப்பு கம்பம்



ரதி – மதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லுக்கட்டி தூக்கிய புல்லுக்கட்டோ?



கோடைகாலம் என்று யார் சொன்னார்கள்?



குடிசன மதிப்பு எடுக்கிறார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தனின் சிந்தனைகள்



'' ஆண்டவன் என்னை ஏன்தான் இப்படியெல்லாம் சோதிக்கின்றானே ''

'' சீச்சி இந்த வாழ்க்கையே வெறுத்துப்போய்விட்டது ''

'' தற்கொலை செய்துகொள்ளலாமென்று தோன்றுகின்றது ''

'' ஊரைவிட்டு ஓடிப் போய்விடலாமா என்றுகூட யோசிக்கிறேன். ''

வாழ்க்கையில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இப்படிவாய்விட்டுச் டுச் சொல்லாதவன் அல்லது மனதால் நினைக்காதவன் உலகத்தில் ஒரு சிலர் தானிருக்க முடியும்.

இவையெல்லாம் விரக்தியின் எல்லையில் நின்றுகொண்டு மனிதன் கதறுகின்ற புலம்பல்.

ஒருமுறை எனது நண்பன் வீதியில் போகும் நாயைக் காட்டி இதற்கு இருக்கும் நிம்மதி கூட எனக்கில்லையே என்றான்.

காலை விடிந்ததுமே நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு தெருத் தெருவாய் மோப்பம் பிடித்துக்கொண்டு அலையும் நாய்க்குத் தான் தெரியும் அதன் கஷ்டம்.

அது ராஜ கம்பீரத்தோடு வீதிவலம் வருகிறதாக நாம் நினைக்கிறோம்.

வாழ்க்கை என்பதே துன்பங்களும் சவால்களும் நிறைந்தவை தான்.

மனித வாழ்க்கை மட்டுமல்ல, உயிரினங்களே போராட்டத்தில் வாழ்பவைகள்தான்.

உலக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் '' உலகம் தோன்றிய காலத்திலிருந்து எந்தெந்த ஜீவராசிகள் போராட்டத்தின் மூலம் தன்னைக் காப்பாற்றிக்கொண்டனவோ அவைகள் தான் இப்போதும் அழியாமல் இருக்கின்றன'' என்று.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள நாம் செய்யும் போராட்டமே வாழ்க்கை.

போராட்டம் என்பது பெரிய கடல் என்றால், வாழ்க்கை என்பது அதில் செல்லும் சிறு ஓடம்.

கடலிலே ஓடத்தைக் கரைசேர்ப்பதற்கு துடுப்பு தேவை.

போராட்டத்திலும் துன்பத்திலும் வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்திக்காட்டுவதற்கு நம்பிக்கை தேவை.

நம்பிக்கையையும் விடாமுயற்சியையும் மனிதன் பிறக்கும்போதே பெற்றுவிடுகிறான். இடைநடுவிலே தான் அதை இழந்துவிடுகிறான்.

ஒரு குழந்தை பிறந்த சில நாட்களிலேயே எழுந்து நடக்க முயற்சிக்கிறது.

பெரியவர்களைப் போல நடக்க, ஓட முடியும் என்று நம்புகிறது.

எனவேதான், மெல்ல மெல்ல கவிழ்ந்து படுக்கவும், தவழ்ந்து பார்க்கவும், தத்தி... தத்தி... நடைபயிலவும் முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் முடியாதென்று குழந்தை படுத்தேகிடந்தால் எத்தனை வருடத்திலும் அது எழுந்து நடக்காது.

நாம் சொல்லிக் கொடுக்காமலேயே குழந்தைக்கு நம்பிக்கை இயற்கையிலேயே வந்துவிடுகிறது.

மனிதனோடு அது பழக பழகத்தான் பயத்தையும், அச்சத்தையும் அவநம்பிக்கையையும் தெரிந்துகொள்கின்றது.

மனிதனுக்கு எந்தெந்த ஆற்றல் இருக்கவேண்டுமோ, அவையெல்லாம் இயற்கையிலேயே மனிதனிடம் நிறைந்திருக்கின்றன.

எந்தெந்த குணங்கள் இருக்கக்கூடாதோ, அவையெல்லாம் இடையிலே வந்து சேர்ந்துவிடுகின்றன.

குழந்தைக்கு ஆரம்பத்திலிருக்கும் தைரியமும், நம்பிக்கையும் இடைக்காலத்தில் தான் இல்லாமல் போகின்றன.

தவழ்ந்து போக நினைக்கும் குழந்தை, தலையைத் தூக்கமுடியாமல் முகத்தை நிலத்தில் மோதிக்கொள்கின்றது. சாயம்பட்டு கத்தினாலும், வலி அடங்கியதும் மீண்டும் தவழத்தான் பார்க்கிறது.

''நம்மால் முடியாது'' என்று சும்மாயிருந்து விடுவதில்லை.

நாமோ ஒரு முறை தோல்வியைச் சந்தித்ததும், என் தலைவிதியே இதுதான் என்று இடிந்துபோய்விடுகின்றோம்.

நடைபயில தொடங்கும் குழந்தை எத்தனையோ முறை விழுந்து எழுகின்றது... முயற்சியை மட்டும் விடுவதாயில்லை.

நாம் மட்டும் துன்பத்தைச் சந்திக்க நேர்ந்துவிட்டால் துவண்டு போய் ஆண்டவனை நொந்துகொள்கின்றோம்.

முயற்சியும் நம்பிக்கையும் இருந்தால் மனிதனால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

தோல்வியையும் துன்பத்தையும் சந்திக்காது எதையும் சாதித்தகாகச் சரித்திரமே இல்லை.

தோல்வியிலும் துன்பத்திலும் நிறைய அனுபவங்களைப் பெறுகிறோம்.

அந்த அனுபவங்கள் தான் வெற்றியின் பாதையில் நம்மை இட்டுச் செல்லும்.

நாம் பாதையில் நடந்துபோய்க் கொண்டிருக்கிறோம். கல் ஒன்றில் தடுக்கி விழுந்துவிட நேர்ந்தால், அப்படியே அங்கேயே உட்கார்ந்து புலம்பிக்கொண்டிருப்பதில்லை.

ஒரு பயணம் போய்க்கொண்டிருக்கிறோம்.

பஸ் பழுதடைந்து நின்றுவிட்டால். அடுத்த பஸ்ஸை தேடுகிறோம்.

வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைக் கண்டு அதிர்ந்துபோய் மலைத்து விடக்கூடாது.

துன்பங்களையும் தொல்லைகளையும் சமாளித்துப் பழகிறவன் மலை போல் உயர்ந்திருக்கும் பிரச்சினையையும் தகர்த்தெறியும் வைராக்கியத்தைப் பெறுவான்.

உலக சரித்திரத்தில் இடம் பிடித்தவர்கள் எல்லாம் தடைகளைத் தாண்டியவர்கள் தான். சவால்களை வென்றவர்கள் தான்.

வானத்தில் பறக்கவும், கடலைக் கடக்கவும், இருளைப் பகலாக்கவும், வெப்பத்தைக் குளிராக்கவும், எங்கோ நடப்பதை வீட்டில் படுத்துக் கொண்டே நம்மால் பார்த்தும், கேட்டும் ரசிக்க முடிகிறதென்றால்,

அது யாரோ ஒரு மனிதனின் நம்பிக்கையும்விடா முயற்சியும் தான்.

எதையும் சாதிக்கவேண்டுமென்ற மனஉறுதியை மட்டும் பெற்றால்,

மாபெரும் பாறையாக நிமிர்ந்துநிற்கும் துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகச் சிதறி காலடியில் வெற்றியாக வந்து குவியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோப்பித் தின்னும் மாடுகள்

உலகில் கோப்பி உற்பத்தி செய்யப்படும் முக்கிய நாடுகளில் ஒன்று கொண்டாரிக்கா. இது தென் அமெரிக்காவில் உள்ளது. இங்கு கோப்பிப் பழத்திலிருந்து கொட்டையைப் பிரித்தெடுத்ததும் எஞ்சிய கழிவை என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார்கள். அவைகளை அப்புறப்படுத்துவதற்கு பல ஆயிரம் ரூபாய்களை செலவிட வேண்டி ஏற்பட்டது. அவைகளை கால் நடை உணவாக மாற்றலாமாவென யோசித்தார்கள். தற்போது கொண்டாரிக்கா மாடுகள் கோப்பிப் பழ தீவனத்தை விரும்பி சாப்பிடுகின்றனவாம். வருடத்திற்கு 36 ஆயிரம் டன் மாட்டு தீனி இதிலிருந்து தயாரிக்கிறார்கள்.




இந்துக்களின் புனித நதி கங்கை! இதில் நீராடினாலோ, நீரைப் பருகினாலோ பாவங்கள் அகலும்! நோய் நொடிகள் தீரும் என்பது ஒரு நம்பிக்கை. உள்நாட்டிலும், வெளி நாட்டிலுமிருந்து இலட்சக்கணக்கானவர்கள் இந் நதிக் கரைக்கு வருகிறார்கள். காசியில் மாத்திரம் நாளாந்தம் 70,000 யாத்திரிகர்கள் கூடுகிறார்கள்.

புனித கங்கை என்பது பண்டைக்காலத்துக்குப் பொருந்தலாம். இன்றோ கைத்தொழில் நகரங்கள் வளர்ச்சியால் இந்நதி மாசு அடைந்துள்ளது. இப்படி ஆராய்ச்சியாளர் திடுக்கிடும் தகவல்களைத் தருகிறார்கள்.

காசியில் நாளாந்தம் 9000 செத்த மிருகங்கள் வீசப்படுகின்றன. இவற்றைவிட சங்கைக்கரையில் எரிக்கப்படும் அஸ்திகள் கரைக்கப்படுகின்றன. அரை குறையாக எரிந்த உடல்களும் வீசப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு வகையில் கங்கை நீர் கழிவு நீரின் வடிகாலாக பாறிவருகிறது. 2525 கிலோ மீட்டர் நீளமுள்ள கங்கையின் இரு மருங்கிலும் உள்ள ஹரித்துவாரம் கன்னபுஜ், கான்பூர், அலகாபாத், பட்னா, கல்கத்தா முதலிய பெரு நகரங்களிலிருந்து பெருகிவரும் கழிவுநீர் கங்கையில் சங்கமமாகின்றது.

இதனைத் தடுப்பதற்கு பல திட்டங்களை இந்திய அரசு வகுத்துள்ளது. இதற்கான மொத்த செலவு 2,500 கோடி ரூபாய். இந்தத் திட்டம் பூர்த்தியாகும் பொழுது, கங்கை மீண்டும் புனிதமடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிந்திப்போம்"

கிரேக்க நாட்டுக்கு அருகில் கிரேட் எனும் அழகிய தீவு! இத் தீவை ஆண்ட பழங்கால மன்னன் ஒருவன் சிக்கலான பல வழிகளைக் கொண்ட விசித்திரமான சுரங்க சிறையொன்றை அமைத்தானும். இதனுள்ளே சென்று அகப்பட்டுக் கொண்டவர்கள் வெளியே வருவது கடினம்.

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பவர்கள் கூட இப்படிப்பட்ட சுரங்கத்தில் சிக்கித் தவிக்கிறார்களோ என்ற உணர்வு நமக்கு உண்டாகிறது.

ஒருபுறத்தில் பேச்சுவார்த்தை இப்படி திசைமாறிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொடுமைகள் கூடிக் கொண்டே போகின்றன. மரங்களிலிருந்து பறவைகள் பறப்பதுபோல, மனித உடல்களிலிருந்து ஒவ்வொரு நாளும் உயிர்கள் பறந்துகொண்டே இருக்கின்றன. ஒரு கோரத் தாண்டவமே அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கல்வியிலும், அறிவாற்றலிலும் சிறப்புமிக்க இலங்கைத் தமிழரின் இன்றைய நிலை கண்டு எமது உள்ளம் குமுறுகிறது. நியாயங்கள் நிஜங்களாவது எப்போது? என ஏங்குகிறோம்.

இதற்கிடையில் மலைபகத்திலும் மனித உரிமைகளுக்கு சாவுமணி அடிக்க சிலர் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். மலைநாடு அமைக்க திட்டம் போடுகிறார்கள். தேயிலைச் செடிகளுக்குப் பின்னால் புலிகள் பதுங்கியிருக்கின்றன, என்று அப்பட்டமான பொய்களைச் சொல்லி புரளியைக் கிளப்பி விஷமப்பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள். இந்த முயற்சிக்கு சில தேசியப் பத்திரிகைகள் தூபம் போடுவதையும் கவலையோடு அவதானித்து வருகிறோம்.

அத்தோடு கைதுசெய்யப்படும் மலையக இளைஞர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே வருகிறது. அதனைத் தடுத்து நிறுத்தவும், மலையக மக்கள் மத்தியில் தெளிவான அரசியல் நிலைபாட்டை ஏற்படுத்தவும் தலைவர் தொண்டமான் மேற்கொள்ளும் பாரிய முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்த நேரத்தில் மலையக மக்களிடையே தெளிவான சிந்தனையும் தீர்க்கதரிசனமான கண்ணோட்டமும் இருக்கவேண்டும். அர்த்தமற்ற நடவடிக்கைகள் அனர்த்தத்தையே விளைவிக்கும்.

அநியாயத்தை எதிர்க்கும் மனத்திடம் இருக்கவேண்டிய அதே நேரம், அமைதியைப் பேணும் மனப்பக்குவமும் அமைந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் தொழில் நிறுவனம் தோட்டத் தொழிலாளர்களுடைய சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்காக இ. தொ. கா. வினால் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நடவடிக்கை இ. தொ. காவின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும், பெருமை பெற்றது. இதுவரை காலமும் தொழிற் தகராறுகள், சம்பள உயர்வுகள் பற்றிய போராட்டங்களிலே கருத்தைச் செலுத்திவந்த இ. தொ. கா. தனது புதிய தொழில் நிறுவனத்தினூடாக தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் பல செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது.



# காங்கிரஸ் தொழில் நிறுவனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருந்தோட்ட மாவட்டங்களின் மத்தியில் அமைந்துள்ள கொட்டகலையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் மோட்டார் மெக்கானிஸம், மேசன், தச்சுவேலை, மின்சாரத் தொழில்கள் போன்ற பல்வேறு தொழில்களில் நூற்றுக்கணக்கான தோட்ட இளைஞர்களுக்குப் பயிற்சியை வழங்கி வருகின்றது. உயர்ந்த தகுதிகளையுடைய போதனுசிரியாகள் அங்கு பணியாற்றுகின்றனர். சுமார், ஒரு கோடி ரூபா செலவில் விரிவான வசதிகளைக் கொண்டு இந்நிலையம் இயங்குகின்றது. இவ்வாருன பயிற்சி வசதிகளை உண்மையில் அரசாங்கத்திஞல் தான் ஏற்படுத்த முடியும். இ. தொ. கா. தனது அயரதத முயற்சியாலும் சர்வதேச தொடர்புகளிஞலும், இவ்வாருன நிலையத்தை ஏற்படுத்த முடிந்தது

தோட்டத் தொழில்களிலேயே நீண்டநாட்களாகத் தங்கியிருக்கின்ற பெருந்தோட்ட மக்களின் சிந்தனையின் பிற தொழில்களைப்பற்றிய எண்ணங்களும், தகுதிகளும் ஏற்பட இத்தொழில் நுட்ப நிலையம் காரணமாக அமைகின்றது,

மேலும் மாடு, கோழி. பன்றி வளர்ப்பு தொழில்களை நவீன முறையில் செய்வதற்கும் சில செயல் திட்டங்கள் காங்கிரஸ் தொழில் நிறுவனத்திஞல் நடைமுறைப் படுத்கப் பட்டு வருகின்றது. இவ்வாறு இயந்திரங்கள், நவீன தொழில்நுட்பம் போன்ற புதிய அம்சங்கள் தோட்ட மக்களுக்கு இன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதஞல் நிச்சயமாகத் தோட்டமக்களின் பொருளாதார சமூக வாழ்வில் காங்கிரஸ் தொழில் நிறுவனம் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த கங்கணம் கட்டி பணிபுரிந்து வருகின்றது. இம் முயற்சியின் வெற்றியின் அறிகுறிகள் இப்போதே தென்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்கிறோம்



"சௌமியம்" இதழின் முதலாவது வெளியீடு இது. உத்வேகத்தின் பிரதிபலிப்பாக இந்த முதல் இதழ் வெளிவந்ததனால் நாம் சகல அம்சங்களையும் உள்ளடக்க முடியாமல் போயிருக்கலாம். அதன் முழுமையான தோற்றத்தை இந்த இதழில் கொண்டு வர முடியவில்லையென்பதை நாமே உணருகிறோம். பல ஆக்கங்களை இதில் சேர்க்க முடியவில்லை. எதிர்வரும் இதழ்களில் மேலும் புதுமைகளைப் புகுத்தி நிறைவு காணக் கருதியிருக்கிறோம். இதன் வெற்றிக்கு உங்கள் அருமையான ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌமியம் நல்ல உரத்துடன்
வளர எங்கள் வாழ்த்துகள்

உரம் கோழித்தீனி விலங்குணவு
விற்பனையாளர்கள்:

**எஸ், வி. எஸ். அன் கம்பனி**

65, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

Telephone, 32571 Teleg: Lev Frey



வளம்புமிகு பல்கலைக்கழகத்தின்
அறிவிதழாக வெளிவரும்
சௌமியம் மென் மேலும்
வளர எங்கள் அன்புகலந்த
வாழ்த்துகள்.

**ப்ரியா ஸ்டோர்ஸ்**

125 டி. டி. எஸ். சேனநாயக்க
வீதி.
கண்டி



சௌமியம் அறிவொளி பரப்ப
வாழ்த்துகிறோம்!

**ஓட்டோ எகுப்மெண்ட்**
**அன் டிரேடிங் கம்பனி**

93, கிவ் ரோட்,
கொழும்பு - 2.

தொலைபேசி : 31097




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோட்டங்கள் என்றதும்** நமக்கெல்லாம் நினைவுக்கு வருவது தேயிலைத் தோட்டங்களும் ரப்பர் தோட்டங்களும் தான், சிலருக்கு பூந்தோட்டங்களும் மரக்கறித் தோட்டங்களும் கூட நினைவுக்கு வரும். ஆனால் நாம் குறிப்பிடும் தோட்டம் அதுவல்ல. கொழும்பில் பல சந்து பொந்துகளில் சிறிய நிலப் பரப்புகளில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நெரிசலாக வாழும் பகுதியே கொழும்பில் "தோட்டங்கள்" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.

ஆமைத் தோட்டம், செட்டித் தோட்டம், வாழைத் தோட்டம், சரவணமுத்துத் தோட்டம் என பல நூறு தோட்டங்கள் உண்டு இது ஏன் தோட்டம் என அழைக்கப்படுகிறது என்பதை கண்டு பிடிப்பது ஆராய்ச்சியாளர்களின் வேலை.

ஆனால் அங்கே என்ன நடக்கிறது, மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை கண்டறிய ஒரு 'ரவுண்டு' போய் வந்தோம். இங்கு வாழ்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பது மகிழ்ச்சியான (?) விசயமாகும். இவர்கள் எப்படி இங்கே வந்து சேர்ந்தார்கள்? "கெட்டும் பட்டணம் சேர்" என்பார்கள். இவர்கள் கெட்டு வந்தார்களா? வந்து கெட்டார்களா? என்பது தெரியாது எப்படியோ பெருந்தோட்டத்துறைக்கு இந்திய தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து எப்படி வந்தார்களோ, அப்படித்தான் இவர்களும் வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிந்து கொண்டோம். புறாக் கூடுகளைப் போல அடுத்தடுத்து சிறுசிறு வீடுகள், ஒடுங்கலான சிறு பாதை, அழுக்கு நீர் ஓடிச் சேறும் சகதியுமாக இருக்கும் வீட்டு முற்றங்கள், அதிலெல்லாம் கால் படாமல் காலை எட்டி வைத்தால் ஒரு வீட்டின் உள்ளேதான் போய் நிற்போம். 12 அடி காம்பராவில் 18 ஜீவன்கள் வாழ்கின்ற உரிமை (அவலம்) மலையகத்தில் மட்டுமல்ல இங்கும் காண்கிறோம். ஒரு பழைய மலசல கூடத்தில் ஒரு குடும்பம் ஜாம் ஜாமென்று வாழ்க்கை நடத்தும் அதிசயத்தைக் கூட கண்டோம்.

இதையெல்லாம் பார்த்து 'இவர்களெல்லாம் பரிதாபகர' மான பட்டினிப் பட்டாளம்" என முடிவு கட்டி விடாதீர்கள். வீடும் சூழலும் தான் இப்படி இருக்கின்றது தவிர, உறுதியான மனமும், அர்த்தமுள்ள வாழ்க்கையும் அவர்களுக்கு இறைவன் கொடுத்த வரம்.

தேனீக்களைப்போல் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் ஓடித்திரிந்து ஏதோ வேலையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் அவர்களில் ஒருவரைப் பிடித்து நிறுத்தி எங்கே போகிறீர்கள் எனக் கேட்டோம். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெயர் சரசுவதி. "தலைக்கு மேலே வேலை கிடக்குதுங்க. வீட்டுக்கு வாங்க வேலையைப் பார்த்துக் கிட்டே பேசுவோம்" என்றார்.

அவர் வீட்டினுள் தலையை நீட்டியதுமே ஒரு கூடை நிறைய வெண்டஞ்சு போல ஏதோ நிறைந்திருந்தது. கிட்ட போய் பார்த்ததும் தான் தெரிந்தது. அவ்வளவும் பூப் போன்ற இட்டலிகள். இரண்டு பெண்கள் நூற்றுக் கணக்கான இட்டலிகளை, சுட்டுத்தள்ளிக்கொண்டிருந்தார்கள். ஒரு பானை நிறைய சட்டினியும் சாம்பாரும் கம... கம ...சனை மூக்கைத் துளைத்

விழி பிதுங்க பார்த்துக்கொண்டிருந்த என்னிடம் "ஏன் இரண்டு இட்லி சாப்பிடுங்களே" என்றாள் சரசுவதி. நாக்கிலும் வயிற்றிலும் எல்லா சுரப்பிகளும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. எடுத்துக் கொடுத்த இரண்டு இட்டலிகளைச் சுவைத்துக்கொண்டே இட்டலி உற்பத்தியைப் பற்றிக்கேட்டேன்.

"ஒவ்வொரு நாளும் முன்னூறு இட்டலி சுடுவோமுங்க, நெறய ஓட்டலுக்குக்கூட சப்ளை செய்றோமுங்க, இந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கே காலை சாப்பாடு நாங்க தாங்க போடுவோம். மாசா மாசம் ஏதோ செலவுக்கேற்றபடி கெடைக்குதுங்க" மகிழ்ச்சியும் மன நிறைவும் அவர் பேச்சில் ஜொலித்தது. வாழ்த்து சொல்லிவிட்டு வெளியே வந்தோம். பக்கத்து வீட்டிலிருந்து அருமையான நெய் வாசனை எங்களை இழுத்தது. அங்கே ஒரு சின்ன

# எறும்புகள் எங்கே போகின்றன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலையைப் போல் நான்கைந்து பேர் சுறுசுறுப்பாக வேலையிலீடுபட்டுக்கொண்டிருந்தார்கள். நிலக்கடலையிலிருந்து பலவிதமான தீன் பண்டங்கள் தயார் செய்யப்பட்டு பக்கட்டுகளில் அடைக்கப்பட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் செய்யும தீன் பண்டங்களிலேயே ''டிஸ்கோ கடலை'' க்குத்தான் நல்ல மவுசாம், கருப்பட்டி பாணியில் நிலக்கடலையை போட்டு செய்வதுதான் டிஸ்கோ கடலையாம்.

வியப்போடு அடுத்த இடத்துக்கு விரைந்தோம். குழந்தைகளின் சொர்க்க புரி அது. தேன் குழல், முறுக்கு, எள்ளுருண்டை, இனிப்பு முறுக்கு, காரமான மிக்ஷர், மில்க் டொபி என்று எதையெதையோ செய்து பக்கற்றுகளில் அடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''ஓடருக்கு ஏத்தபடி சாமான் சப்ளை பண்ண முடியலிங்க.. .. ஆள் வசதியோ, இட வசதியோ இல்லீங்களே......'' இது அங்கிருந்த ஒருவரின் அங்கலாய்ப்பு.

இடவசதி இருந்தால் இன்னும் நான்கு படங்கு செய்தாலும் விற்றுதீர்ததுவிடுவார்களாம். இன்னொரு இடத்தில் பலவிதமான நறுமணங்களில் ஊதுபத்திகள் உற்பத்தி செய்கிறார்கள். வண்ண விண்ண பக்கற்றுகளில் அடைக்கப்பட்டு விற்பனைச் சந்தையில் மற்ற ஊதுபத்திகளோடு போட்டிபோடும் தரத்தில் தயாராகிக்கொண்டிருக்கின்றது.

இன்னும் பல்பொடி பக்கற் செய்தல் பேக் ஒட்டுகல், பொலிதீன் பேக்குகள் ஒட்டுதல் தைத்தல், எல்லாமே வீட்டுக்கொன்றாய் நடக்கின்றது.

ஒரு வீட்டில் பூச்சரங்களும், பூமாலைகளும் சட்டி பூக்கடைகளுக்கும் சில கோவில்களுக்கும் வாடிக்கையாக கொடுக்கின்றார்கள்.

ஓரிடத்தில் மங்கையர்களின் மனங்கவரும் அழகிய கூந்தல் கிளிப்புகள் செய்யப்படுகின்றன. அதன் வண்ண நிறங்களும், நேர்த்தியான வேலையும் நம்மை அப்படியே அசத்திவிடுகின்றது.

இவைகளைப் பார்த்துவிட்டு முக்கியமான ஒரு இடத்துக்கு வருகின்றோம். அது கருப்பட்டி செய்யும் இடம். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் சிறு சிறு அச்சுகளில் போட்டு கருப்பட்டி செய்யப்பட்டு மளமளவென்று குவிக்கப்படுகின்றது. இங்கு நாங்கள் போனதும் ''கருப்பட்டி உற்பத்தி தானே'' என்று சாதாரணமாக இருந்தோம். ஆனால் அவர்கள் சொன்ன தகவல் எங்களைத் தூக்கிவாரிப் போட்டது. ஆம், அவர்கள் கருப்பட்டி செய்வது முக்கிய விசயமல்ல, அது எங்கே விநியோகிக்கப்படுகிறது என்பதில் தான விஷயமே இருக்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானைக்கு மட்டுமே முடியும்

நாம் முழங்காலில் முட்டிப் போடுகின்றோமல்லவா? அப்படி மிருகங்களும் முட்டிப் போடும். சில மிருகங்களினால் முன் இரு கால்களிலும் சிலவற்றால் பின்னிரு கால்களிலும் தான் முட்டிப் போட முடியும். ஆனால் நான்கு கால்களிலும் முட்டிப் போடக் கூடிய மிருகம் யானை மட்டும்தான்

---

காலத்தின் கோலத்தால் ஏதேதோ தப்புகளையெல்லாம் செய்துவிட்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் சிறைச்சாலைகளிலே வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறார்களே - நடந்து போன கசப்பான அனுபவங்களுக்காக இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்களே - அவர்களுக்கு இனிப்பான சுவை எந்த நாளும் இங்கிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றதாம். வெலிகடை, போசம்பரை போன்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம் இங்கிருந்துதான் கருப்பட்டி விநியோகிக்கப்படுகின்றது. சிறை கூடத்திலே கருப்பட்டி "ஸ்டொக" தீர்ந்துவிட்டால் வேனுடன் வந்து நின்றுகொண்டு அவசரப்படுத்துவார்களாம், சிறை அதிகாரிகள், "கைதிகளுக்கு கொடுக்கின்ற கருப்பட்டி கைஸ் தாங்க..." என்று ஒரு சிறிய துண்டு கருப்பட்டியை அங்கிருந்த ஒருவர் நீட்டுகிறார். வாயில் போட்டதும் சப்புவதற்கு முன் கரைந்து... காணாமல் போய்விட்டது. சளைக்காத உழைப்புக்குப் கூப முயற்சிக்கும் இவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றார்கள். மலையக மக்கள் தனித் தொழிலிலும் ஈடுபட வேண்டுமென்ற கருத்து இன்று பரவலாக வலியுறுத்தப்படுகின்றது. இவர்களோ யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே செய்து காட்டுகிறார்கள்.

இவர்களின் உறவினர்களில் நிறையப்பேர் மலையகத்தில் வாழுகின்றார்கள். மலையகத்தவர்களுக்கும் இவர்களுக்கும் தாராளமான திருமண உறவுகள் ஏற்படுகின்றன.

தற்போது இ. தொ. கா. நடத்தும் மகளிர் அணியின் வேலைத் திட்டங்களின்மூலம் இங்குள்ளவர்கள் தோட்டப் பகுதிகளுக்கு சென்று பார்த்துவரவும் அங்கு நடத்தும் கருத்தரங்குகளில் பங்குபற்றவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது இது இவ்விரு மக்களிடையேயும் இன்னும் நெருக்கமான உறவை நிச்சயம் ஏற்படுத்துமென்று இதற்காக இயங்கிக்கொண்டிருக்கின்ற திருமதி தவமணிதேவி தெரிவித்தார்.

இவர்களுக்கு அமைந்திருக்கும் சொந்த தொழிலும், நல்ல வருமானமும் சுதந்திரமான வாழ்க்கை முறையும், முன்னேற வேண்டுமென்ற துடிப்பான சிந்தனையும் இவர்களின் எதிர்காலத்திற்கு நல்ல அத்திவாரமாக அமையுமென்ற நம்பிக்கையோடு திரும்பினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைப் பெட்டியா? சிவப்புப் பெட்டியா?



காங்கிரஸ் தோன்றுவதற்கு முற்பட்ட காலம். வெள்ளைக்காரன் கொடிகட்டிப் பறந்த நேரம்.

கூடி நிற்காதே! குடைப்பிடிக்காதே! குனிந்து சாம்போடு! குட்டிச்சாக்கில் சம்பளம் வாங்கு! வெள்ளை வேட்டி கட்டாதே! விருப்புப் பேசாதே! என்ற தர்பார்! ஒவ்வொரு தோட்டமும் வெள்ளைத் துரையின் குட்டி சமஸ்தானமாகவே விளங்கியது!

இப்படிப்பட்ட காலகட்டத்திலே தான் திரு. கோ. நடேசய்யர் நலிந்துருகிய தோட்டத் தொழிலாளருக்காக சிம்மக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தார்.

1931இல் நடந்த சட்டசபை தேர்தலில் நடேசய்யர் போட்டியிட்டார் அவரை எதிர்த்து போட்டியிட்டவர் திருமதி ராஜரட்னம். அக்காலத்தில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் கலர் பெட்டிகள்தான் ஓட்டுப் பெட்டிகள். நடேசய்யருக்கு சிவப்பு, மற்றவருக்கு பச்சை பெட்டி. நோட்டீசுகளும் பச்சை சிவப்பு தான். நடேசய்யருடைய நோட்டீசுகளில் பாடல்கள் நிறைய இருக்கும். அதை அவர் மனைவி மீனாட்சியம்மையார் பாடுவார். தொழிலாளர்கள் மெய்மறந்து கேட்பார்கள்.

பாப்பான் பாப்பானென்று — நீங்கள்
பலதடவை சொன்னாலுமே
பாப்பான் அல்லவென்று — அய்யர்
பறையடித்து சொல்லலையே
பனையைச் சேர்ந்தாளோ அல்லது
பழங்கள் விற்றாளோ
தொழிலாளர் படையினை
தொலைக்கப்பாடு படுவரை
பழியாகப் பேசி நீங்கள்
பச்சைநோட்டீ சடித்துமெத்த
பசப்புவதேனோ சும்மா
உசுப்புவதேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பாடல்களோடு, குறுநடை சம்பாஷணைகளையும் நோட்டீஸ் வாயிலாக எழுதியிருப் பார். அந்தச் சம்பாஷணைகள் கொச்சைத்தமிழாகவே இருக்கும். அதையும் கேட்போம்.

குருகன்: அடேயப்பா. யானைக்கூட்டத்தை திரட்டி, விரட்டி ஓட்டி விடும் சிங்கம் நம் அய்யர் அவர் சொக்கத்தங்கம்! நீ அடைவாய் பங்கம்! அய்யரே வீர, சூர, பராக்கிரம குண்டு! உன் திரேகத்தைத் துளைக்கும் வண்டு! நல்லா யோசித்துப் பார் மண்டு!

முருகன்: நீ பயித்தியத்தில் மிகுந்தவன். நான் சொல்வதைக் கேளு. எவனொருவன் சாமியிடத்தில் மெய்யறிவும், பக்தியுமுண்டோ அவனே மகாபுருஷன். ஒன்னைப் போல வீணன டமபட டாம்ப டொம்ப வெளிச்சம் போட்டு டிங்கி, டமாஞ்சு, ஓங்க கோணி கிழிஞ்சி சொல்றியே. கண்டாக்கு அய்யா வாருரு, (மெதுவாக) பேசாதே. உன் பேச்சைக் கேக்கிறேன். சிகப்புக்கு ஓட்டுப் போடுறேன். கண்டாக்கு வாருரு!

# எஸ்.பி.தங்கவேலு

முருகன்: அடே குருகா! நம்ப எமடன் தொரைக்கு ஓட்டுட்போட்டால் பொழைக்கலாம். பயித்தியத்துக்கு ஓட்டுப்போடாதே!

குருகன்: ஏ! சாமியாரே வீட்டுக் கூரை ஏற முடியாத எமட்டன் தொரை வானத்தைக்கீறி வைகுண்டம் காண்பிப்பது எப்படி? இந்தச் சக்கரத்திலே இருககுதே அது என்ன கட்டை?

முருகன்: அது மந்திர சக்கரம், ஈஸ்ட் கேரஸ்ட் சக்கரம்.

குருகன்: அது என் காதிலே நுளையிலேயே.

முருகன்: உன்னைப் போலொத்த ஆழிவாயனுக்கு தான் நுளையாது உனக்குத் தெரிந்த சேத்தாளிகளுக்கெல்லாம் சொல்லு. பச்சைப் பெட்டிக்கு ஓட்டுப் போடச் சொல்லு

குருகன்: பயித்தியக்காரா என்ன வார்த்தைச் சொல்லுகிறாய்.

குருகன்: வந்தா வரட்டும். அவரும் நம்மைச் சேர்ந்தவன் தான். பாதகா! சொல்லும் வார்த்தையைக் கேளு! எப்படிசையோர் கொண்டாட, மண்டலத்திலுள்ள வெள்ளையரும் கேட்டு மதிமறந்து இப்போது திண்டாடிக்கொண்டிருக்கும் அவரது மனம் வீரங்கொண்டு — ஆனந்தங்கொண்டு இவ்வெள்ளையர் கீர்த்தியை கீழிறக்க எண்ணங்கொண்டு, தொண்டர் மகிழ வீராவேசத்துடன் மலை நிறைந்த இலங்கை எல்லாம்சுற்றி, வஞ்ச நெஞ்சமுடைய பஞ்சமா பாதகர்களை மனதால மாட்டி— பராக்கிரமத்தைக் காட்டி, சாட்டையிலிட்ட பம்பரம் போல் ஆட்டினரே நேசவிசுவாசர். நண்பின் சிறந்த நடேசர் தெரியுமா?

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜேர்மன் சமஷ்டி குடியரசிலுள்ள பத்து மாநில அரசுகளில், ஹம்பேர்க்கும் ஒன்று. 16 லட்சம் மக்களைக்கொண்ட செல்வமிக்க இம் மாநிலத்தில் அண்மையில் நடந்த தேர்தலில் ஒரு புதுமை நிலவியது. இத்தேர்தலில் போட்டியிட்ட ஒரு அரசியல் கட்சி தனது வேட்பாளர் களாகப் பெண்களை மட்டுமே நிறுத்தியது. 50-க்கு மேற்பட்ட வேட் பாளர்களை நிறுத்திய அக்கட்சி, 17 தொகுதிகளில் வெற்றியீட்டியது. பச்சைக் கட்சி (Green Party) என்ற இக்கட்சி, ஜெர்மனியில் ஒரு பிரதான கட்சியாக விளங்காவிட்டாலும், செல்வாக்கு மிக்க கட்சி.

பெண்களை மாத்திரமே வேட்பாளர்களாக உலகத்தில் எக்கட்சி யும் நிறுத்தியதில்லை. ஜெர்மனியில் மட்டுமல்ல, முழு ஐரோப்பாவி லுமே இந்த நிகழ்ச்சி ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மரங்கள் மடிகின்றன:



இந்தியர்களுக்கு பசுக்கள் எப்படியோ [...] களுக்கு மரங்கள். அங்குள்ள நிலப்பரப்பில் 25 சத வீதம் காடு[...] நூற்றுக்கு 80 வீதம் ஜெர்மனியர் மாதமொரு முறையாவது சென்று பொழுதைக் கழிப்பார்கள்,

அவர்கள் நேசித்து வந்த காடுகள் மெதுவாக இறந்துவருவ தைக் கண்டு பெருங்கிலேசம் கொண்டுள்ளனர் மரங்கள் மடிவதற் கான காரணத்தை ஆராய்ந்தனர். இரசாயண தொழிற் சாலைகளி லிருந்து வெளிப்படும் அமிலங்கள் ஆவி மழையாகப் பொழிந்து மரங் களைத் தாக்குவதினால் தான் இந் நிலை என்பதைக் கண்டார்கள். எப்படித்தான் இட்பிரச்சினையைத் தீர்க்கப்போகிறார்களோ தெரிய வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் மகிழ்வுற

சௌமியம் ஒளிபரப்ப

மனமுவந்து வாழ்த்துகிறோம்!



## லக்கிலாண்ட் பிஸ்கட்

## தயாரிப்பாளர்கள்

குண்டசாலை.

தொலைபேசி ; 08 - 2 4 2 1 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRIDGESTONE

JAPAN'S No.1
TYRE



SKHX

Telex 22109 AUTODRM CE
Phone 26181 - 26183

ATTRACTIVE DISCOUNT for fleet owners

AUTODROME

323, Union Place, P. O. Box 330, Colombo 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org